www.nammakalvi.com



*உரைநடை உலகம்*

இயல் ஆறு

# சிற்பக்கலை

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று ...............**

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

**விடை : அ) மாமல்லபுரம்**

**2. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ...............**

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

**விடை : ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்**

### குறுவினா

**1. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.**

- செப்புத் திருமேனிகள் சோழர் கால சிற்பக்கலை நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகும்.
- சோழர் காலத்தில்தான் மிகுதியான செப்புத்திருமேனிகள் உருவமைக்கப்பட்டன.
- கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு வடிவமைக்கப் பட்டன.
- சோழர் காலம் "செப்புத் திருமேனிகளின் பொற்காலம்" என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

**2. நடுகல் என்றால் என்ன?**

- நடுகல் பற்றியக் குறிப்பு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.
- போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும்.
- அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப் பெறும். அவரது வீரத்தின் சிறப்பும் கூறப்பெறும்.
- தமிழரின் தொடக்ககாலச் சிற்பக் கலைக்குச் சான்றாக இதனைக் குறிப்பிடுவர்.

**3. இசைத்தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?**

பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்கள் விஜய நகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டன.

www.nammakalvi.com



## சிறுவினா

**1. முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?**

**முழு உருவச் சிற்பம்:**

உருவத்தின் முன் பகுதியும், பின் பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்து இருக்கும்.

**புடைப்புச் சிற்பம்:**

புடைப்புச் சிற்பத்தில் முன்பகுதி மட்டுமே தெரியும் படி அமைந்து இருக்கும்.

**2. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?**

- நாயக்கர் காலச் சிற்பங்களில் ஆடை ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படும்.
- நாயக்கர் காலச் சிற்பங்களை, கலை நுட்பத்தின் உச்சநிலை படைப்பு என்று கூறலாம்.
- விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலை நயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

## நெடுவினா

**1. தமிழ்நாட்டு சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.**

**முன்னுரை:**

கல்லிலும், உலோகத்திலும் கருவிகள் செய்த மனிதன்; சிற்பம் என்னும் நுண்கலையை வடிக்கத் தொடங்கினான். உணர்வுகளையும், நிகழ்வுகளையும் வெளிப்படுத்தும் சிற்பங்கள் வரலாற்றின் வாயில்களாகவும், கலைநயம் மிக்கனவாகவும் காணப்படுகின்றன.

**சிற்பங்களின் கலை நயம்:**

“கற்கவிஞர்கள்” என்று சிறப்பிக்கப்படும் சிற்பிகள் வடித்த சிற்பங்கள் ஒவ்வொன்றும் கலைநயம் மிக்கவையாய் மிளிர்கின்றன.

சிற்பங்களை கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள் நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் கலைநயம் மிளிர செதுக்கினர்.

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் உள்ள சிற்பம் நடனக்கலையின் முத்திரைகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் பாங்கு கலை நயத்துக்கோர் சான்றாகும். கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டுள்ளன. திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சிற்பக்கலை நுட்பத்திற்கு தனி சான்றாய்த் திகழ்கிறது.

கோவில் கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. அவற்றுள் ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின. அவையும் சிற்பக் கலைநுட்பம் வாய்ந்தவை. உருவங்கள் விழியோட்டம், புருவ நெளிவு. நகஅமைப்பு என மிக மிக நுட்பமாக கலை நயத்துடன் படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன், குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் கலைநயம் வாய்ந்தவை.

www.nammakalvi.com



**சிற்பங்கள் வரலாற்றுப் பதிவுகள்:**

சிற்பக் கலையைப் பற்றிக் கூற முற்படுகின்ற பொழுது,

- பல்லவர் காலச் சிற்பங்கள்
- பாண்டியர் காலச் சிற்பங்கள்
- சோழர் காலச் சிற்பங்கள்
- விஜய நகர மன்னர் காலச் சிற்பங்கள்
- நாயக்கர் காலச் சிற்பங்கள்

என்றே வகைப்படுத்துகிறோம். எனவே சிற்பக்கலை வரலாற்றுப் பதிவாகவும் திகழ்கிறது என்பதை மறுக்க இயலாது.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள் மூலம் பல்லவர் கால வரலாற்றை உணரலாம்.

திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், கழுகுமலை வெட்டுவான் கோவில் சிற்பங்கள் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம், தஞ்சை பெருவுடையார் கோவில்களில் உள்ள சிற்பங்கள் மூலம், இராசஇராசசோழன், குலோத்துங்க சோழன், இராசேந்திர சோழன், இரண்டாம் இராசராசன் போன்ற மன்னர்களின் வரலாறுகளையும், அவர்கள் கலை வளர்த்தப் பாங்கினையும் அறியலாம்.

விஜயநகர மன்னர்கள் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் அமைக்கும் பணியைச் செவ்வனே செய்தது, அவற்றில் சுதைகளாலான சிற்பங்களை அமைக்கச் செய்தனர்.

சோழர் காலத்தை செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று சிறப்பிக்கின்றனர்.

நாயக்க மன்னர்களின் காலத்தில் ஆயிரங்கால் மண்டபம் அமைக்கப்பட்ட வரலாற்றை அறிவிக்கிறது இக்கலை.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் தூண்களில் உள்ள சிற்பங்கள் கண்ணப்பர், சந்திரமதி, அரிச்சந்திரன் வரலாற்றை எடுத்துக் கூறுகிறது.

**முடிவுரை:**

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களைக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல, அவை கலைநயத்தின் சான்றாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும், அறிவின் முதிர்ச்சிக்கு ஓர் அடையாளமாகவும் இருப்பதால் சிற்பக்கலையைப் போற்றி பேணுவது நம் கடமையாகும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடப்படுவது எது ...............**

அ) மைல்கல் ஆ) சுடுகல் இ) நடுகல் ஈ) கருங்கல்

**விடை : இ) நடுகல்**

www.nammakalvi.com



**2. சிற்பிகள் ............... என சிறப்பிக்கப்பட்டனர்.**

அ) கல்லோவியர்கள் ஆ) கற்கவிஞர்கள்
இ) கற்சொல்லோவியர்கள் ஈ) சுவரோவியர்கள் **விடை : ஆ) கற்கவிஞர்கள்**

**3. கழுகுமலை கோவில் சிற்பங்கள் ............... காலத்தவையாகும்.**

அ) நாயக்கர் ஆ) பல்லவர் இ) பாண்டியர் ஈ) சோழர்

**விடை : இ) பாண்டியர்**

**4. தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்ட நூல் ................**

அ) சிற்பக்கலை ஆ) தமிழக சிற்பங்கள்
இ) சிற்பமும் சிந்தனையும் ஈ) சிற்பச்செந்நூல் **விடை : ஈ) சிற்பச்செந்நூல்**

**5. உலோகப்படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்**

அ) சுவாமிமலை ஆ) கும்பகோணம் இ) மதுரை

i) அ-சரி, ஆ, இ - தவறு ii) முதல் இரண்டு சரி
iii) மூன்றும் சரி iv) மூன்றும் தவறு **விடை : iii) மூன்றும் சரி**

**6. தமிழகச் சிற்பக்கலையில் இடம் பெறும் கலைக் கூறுகள்**

அ) யோகக்கலை ஆ) நாட்டியக்கலை இ) இசைக்கலை ஈ) பேச்சுக்கலை

i) அ, ஆ-சரி ii) அ,ஆ - தவறு
iii) நான்கும் சரி iv) நான்கும் தவறு **விடை : யோகக்கலை, நாட்டியக்கலை**

**7. கொடும்பாளூர் மூவர் கோவில் கட்டிய மன்னன்**

அ) முதலாம் பராந்தகச் சோழன் ஆ) இரண்டாம் பராந்தகச் சோழன்
இ) முதலாம் குலோத்துங்கச் சோழன் ஈ) இரண்டாம் குலோத்துங்கச் சோழன்

**விடை : ஆ) இரண்டாம் பராந்தகச் சோழன்.**

**8. நடுகல் பற்றிக் குறிப்பிடும் இலக்கணநூல்**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) புறப்பொருள் வெண்பாமாலை ஈ) இலக்கண விளக்கம் **விடை : அ) தொல்காப்பியம்**

**9. மாளிகைகளில் சுதைச் சிற்பங்கள் இருந்ததைக் குறிப்பிடும் காப்பியம் எது?**

அ) சீவகசிந்தாமணி ஆ) மணிமேகலை
இ) நளவெண்பா ஈ) சிலப்பதிகாரம் **விடை : ஆ) மணிமேகலை**

**10. நாயக்கர்கால சிற்பக்கலை நுட்பத்துக்குச் சான்றாகும் கோவில் எது?**

அ) மூதூர் பெருமாள் கோவில் ஆ) பேரூர் சிவன் கோவில்
இ) காஞ்சி கயிலாயநாதர் கோவில் ஈ) சீனிவாசநல்லூர் இரங்கநாதர் கோவில்

**விடை : ஆ) பேரூர் சிவன்கோவில்**

**11. திருவரங்கக்கோவில் யாருடைய காலத்துக் கட்டடக் கலைக்குச் சான்றாகிறது.**

அ) பாண்டியர் ஆ) சோழர் இ) பல்லவர் ஈ) சேரர்

**விடை : ஆ) சோழர்**

www.nammakalvi.com



## குறுவினா

**1. சிற்பங்களை உருவாக்க எவற்றையெல்லாம் பயன்படுத்தலாம் என திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.**

கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை (சுண்ணாம்பு) தந்தம், கண்ட சருகக்கரை, மெழுகு போன்றவற்றைப் பயன்படுத்தலாம் என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.

**2. சிற்பங்கள் அமைக்கப்படும் நான்கு நிலைகள் யாவை?**

- தெய்வ உருவங்கள்
- இயற்கை உருவங்கள்
- கற்பனை உருவங்கள்
- முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் கல்லினாலும், உலோகத்தினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

**3. பாண்டியர் கால சிற்பவேலைப்பாடுகளுக்கு சான்றாகும் இடங்கள் யாவை?**

பாண்டியர் காலத்தில் குகைக் கோயில்களில் சிற்பவேலைப்பாடுகள் நிறைந்திருந்தன. அவற்றுக்கு சான்றாக. திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களைக் கூறலாம்.

**4. சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?**

- இரண்டு வகையாகப் பிரிக்கலாம்
- முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என்பனவாகும்.

**5. புடைப்புச் சிற்பங்களை எங்கு காணலாம்?**

அரண்மனைகள், கோவில்கள்.

**6. கற்கவிஞர்கள் - குறிப்பு வரைக.**

சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களைவடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கின்றனர்.

**7. சோழர் காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்பவை யாவை?**

- முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில்
- முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம்
- இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில்
- இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில்

**8. சோழர் காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குபவை?**

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

**9. நாயக்கர் காலச் சிற்பங்கள் காணப்படும் இடங்களுக்குச் சான்று தருக.**

- மதுரை மீனாட்சி அம்மன் கோவில்
- இராமேசுவரம் பெருங்கோவில்
- திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில்

www.nammakalvi.com



**10. நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று குறிப்பிடப்படுவது எது?**

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள்

## சிறுவினா

**1. பௌத்த - சமண சிற்பங்கள் - குறிப்பு வரைக.**

- பௌத்த சமயத்தினர் புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த நிலைகளில் சிற்பங்களாக படைத்து வழிபட்டனர்.
- சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

**2. இன்றைய சிற்பக்கலை குறித்து எழுதுக?**

- இன்று சுதை சிற்பங்களும், கல்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.
- செங்கல், பைஞ்சுதை (சிமெண்ட்) ஆகியவற்றைக் கொண்டும் கலைநயமிக்க சிற்பங்களை வடிக்கின்றனர்.
- வெண்கலம் மற்றும் செயற்கை இழைகள் மூலமாகவும் உருவங்கள் உருவாக்கப் படுகின்றன.
- இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்து, பலதுறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது.

**3. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பங்கள் பற்றி எழுதுக.**

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் கண்ணப்பர், குறவன் குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலைநயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.

**4. சிற்பக்கலை வளர்ச்சியில் தமிழக அரசின் பங்கினை எடுத்தியம்புக.**

- தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியில் இருந்து ஆண்டுதோறும் சிற்பக் கலைஞர்கள் பலர் உருவாகின்றனர்.
- சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம்.
- இக்கலைத்துறையில் மிகுதியான வேலைவாய்ப்புகள் உள்ளன. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 156

**1. உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக்குறிப்பை உருவாக்குக.**

திருநெல்வேலியில் இருந்து 12 கி.மீ தொலைவில், திருச்செந்தூர் சாலையில் 16 ம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயில் அமைந்துள்ளது.

www.nammakalvi.com



இக்கோயிலின் தனிச்சிறப்பு அங்குள்ள சிற்பங்களே. இரு மண்டபங்களிலும் ஆறு அடிக்கு குறையாமல், 30க்கும் மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன. இந்தச் சிற்பங்கள் அனைத்தும் ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான தூண்களில்தான் உள்ளன.

இங்குள்ள பீமன், வியாக்ரபாலகன் சிற்பம் பற்றிய ஒரு செய்தி உண்டு.

பீமனும், வியாக்ரபாலகனும் சண்டையிடுகின்றனர். தர்மராஜா நடுநிலை வகிப்பதாகவும், நடுவராக இருந்த தர்மராஜா வியாக்ரபாலகன் வென்றதாகவும் தீர்ப்பளித்தாராம்.

இந்தச் செய்தியைக் குறிக்கும் வகையில், அதிசயச் சிற்பத் தொகுப்பாக அமைந்துள்ளது. பீமனும், வியாக்ரபாலகனும், தர்மராஜாவும் இருக்கும் சிற்பம் உள்ளது.

இச்சிற்பத்தில், பீமன் வீரமும், திமிரும் வெளிப்படுத்தும் முகபாவத்துடனும், வியாக்ரபாலகன் பராக்கிரமத்துடனும், தர்மராஜா அமைதியான முகபாவத்துடனும் இருப்பதாக சிற்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள சிற்பங்கள் அனைத்தும் தலைசிறந்த கலைப்படைப்புகளாகவும், உணர்ச்சி ததும்பும் உயிரோவியங்களாகவும் காட்சியளிக்கின்றன.

இக்கோயிலின், இராஜகோபுரமும் கருங்கல்லிலான திருச்சுற்று மதில்களும், 16-ஆம் நூற்றாண்டின் கட்டிடக்கலைப் பணிக்குச் சான்றாக உள்ளது.

**2. ஓவியர்/சிற்பி/இசைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்து அவர் கூறும் கலை நுட்பங்களையும், அனுபவங்களையும் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

**சிற்பியின் கலை நுட்பங்களும், அனுபவங்களும்**

எங்கள் ஊருக்கு அருகில் உள்ள சிற்பி ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரிடம் சிற்பங்களை [செதுக்குதல், வடித்தல், உருவாக்கல்] ஒவ்வொரு பொருளைக் கொண்டு செய்யும் போது மேற்கூறிய மூன்று பெயர்களாலும் அழைக்கப்படுமாம். உருவாக்கும் நுட்பங்களைக் கூறமுடியுமா என்று வினவிய போது, பல வியப்புக்குரிய செய்திகளைக் கூறினார். இதோ அவர் கூறிய கருத்துகள்.

சிற்பம் என்பது ஒரு முப்பரிமாணக் கலைப்பொருள் ஆகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத்தன்மைகொண்டபொருள்களில்இருந்துஉருவம்கொடுப்பதுமூலம்உருவாக்கப்படுகிறது.

கற்கள், உலோகம் (செம்பு) மரம், மண், தந்தம் போன்ற பொருட்கள் சிற்பங்கள் உருவாக்கப் பயன்படுபவையாம்.

கல், மரம் போன்றவற்றில் சிற்பம் உருவாக்கும் போது, சிற்பமாக உருவாக்க வேண்டியவற்றைச் செதுக்குவார்களாம்.

உலோகம் போன்ற பொருள்களைக் கொண்டு செய்யும் போது உருக்கி வார்ப்பார்களாம்,

**ஒட்டுதல்**

அச்சுகளில் அழுத்துதல் போன்ற உத்திகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்துவோம் என்றார். மண்ணால் செய்யும் போது உருவத்தைச் செய்தபின் சூளையில் சுடுவதாகக் குறிப்பிட்டார்.

சிற்பங்கள் மனித நாகரிகத்தையும், அதன் வளர்ச்சிக் கூறுகளையும் வெளிப்படுத்தும் சான்றுகள் என்று பெருமிதப்பட்டார்.

www.nammakalvi.com



மேலும், கல், உலோகம், செங்கல், மரம், சுதை (சுண்ணாம்பு) மெழுகு, தந்தம் வண்ணம். கண்ட சருக்கரையும் சிற்பம் வடிக்க ஏற்றவையாம்.

ஒரு உருவத்தின் முன்புறம், பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களை முழு வடிவச் சிற்பங்கள் என்றும். ஒரு புறத்தை மட்டும் காட்டும் சிற்பங்களைப் புடைப்புச் சிற்பம் என்றும் கூறுவார்கள் என்று தெளிவுபடுத்தினார். சிற்பங்கள் சமய வெளிப்பாடாகவும் அரசாட்சி பற்றிய வெளிப்பாடாகவுமே இருந்தன என்றார்.

முன்பெல்லாம் சிற்பங்களை உருவாக்கிய மேதைகள் சிற்பக்கலை மூலம் உருவங்களுக்கு உயிரூட்டினர். இன்றோ பண்டைய மரபு முறைகள் முற்றிலும் மாறுபட்டு வருவதோடு உடலமைப்பை வெளிப்படுத்துவதாக மாறி விட்டதே என்று வருந்தினார்.

நானும் விடை பெற்றுக்கொண்டு வந்தேன்.

※※⁂⁂⁂※※

*கவிதைப் பேழை*

# இயல் ஆறு

# இராவண காவியம்

தமிழ் இலக்கியத்திரையில் மிகுதியான எழிலோவியங்களைச் சொல்லோவியங்களாகப் புலவர்கள் தீட்டி வைத்துள்ளனர். அவற்றுள் சில சொல்லோவியங்கள் இராவண காவியத்திலும் இடம் பெற்றுள்ளன. அதனைப் படித்துச் சுவைப்போம்.

## நூல்வெளி

இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவணகாவியம். இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் 1946 -ஆம் ஆண்டு இயற்றி வெளியிடப்பட்டது.

இந்நூல், தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக்காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என்னும் ஐந்து காண்டங்களை உடையது. இந்நூலில் 57 படலங்கள் உள்ளன. 3100 பாடல்கள் உள்ளன.

இந்நூல் தமிழ்த் தேசிய உணர்வுக் காப்பியம் என்றும் அழைக்கப்பட்டது.

இந்நூலில், தமிழ் உயர்வும், தமிழர் உயர்வும் காட்டப்படுகிறது.

## ஆசிரியர் குறிப்பு:

- இராவண காவியம் இயற்றியவர் புலவர் குழந்தை ஆவார். ஜுலை 1-ஆம் நாள் 1906 ஆம் ஆண்டு ஈரோடு அருகே “ஓலவலசு” என்னும் சிற்றூரில் பிறந்தார்.
- பெற்றோர்: முத்துசாமிக் கவுண்டர், சின்னம்மை.

- தந்தை பெரியார் மீது மரியாதையும் பற்றும் கொண்டவர். பெரியாரின் வேண்டுகோளுக்கு இணங்க 25 நாளில் திருக்குறளுக்கு உரை எழுதினார்.
- யாப்பதிகாரம், தொடையதிகாரம் - உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.
- குழந்தை அவர்கள் “வேளாண்'' என்ற மாத இதழை நடத்தினார். இவர் செப்டம்பர் 22 ம் நாள் 1972ல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**பாடப்பகுதி பகுதி :**

தமிழகக் காண்டத்திலுள்ள ஐவகை நிலங்களின் காட்சிகளைக் கூறும் பத்துப் பாடல்கள் நம் பாடப் பகுதியாக இடம் பெற்றுள்ளன.

## குறிஞ்சி

**மலையும் மலைசார்ந்த பகுதியும்**

அருவிய முருகிய ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்

அடுப்பிடு சாந்தமோடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும்
மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்
கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே

**விளக்கம் :**

மலையில் இருந்து ஆர்ப்பரித்து விழும் அருவியானது குறிஞ்சிப்பறை முழங்குவது போல் ஒலிக்கும். பைங்கிளிகள் தான் அறிந்த தமிழிசையைப் பாடும். பொன் போன்ற அழகிய மயில்கள் தன் அகன்ற சிறகினை விரித்து ஆடும். இக்காட்சியினால் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினங்கள், மிரட்சியுடன் பார்க்கும்.

உணவைச் சமைப்பதற்காக அடுப்பில் இடும் சந்தன மரக் குச்சிகளின் நறுமணமும், அகிலின் நறுமணமும், கொதிக்கின்ற உலையில் இட்ட மலை நெல் அரிசிச் சோற்றின் மணமும் வெளிப்படும். இவற்றுடன் எங்கும் மலர்ந்து கிடக்கும் காந்தள் மலரின் மணமும், பரவித் தோய்ந்து கிடந்ததனால் குறிஞ்சி நிலப்பகுதி முழுவதும் உள்ள பொருட்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

**சொல்லும் - பொருளும் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முருகியம் | – | குறிஞ்சிப் பறை | துடுப்பிடு | – | உலையில் இட்ட |
| அருகிய | – | அருமையான | மைவனம் | – | மலை நெல் |
| சிறை | – | சிறகினை | சாந்தம் | – | சந்தனம் |
| பூஞ்சினை | – | பூக்களை உடைய கிளை | கமழும் | – | மணம் வீசும் |
| மடுப்படு | – | வெளிப்படும் | | | |

## முல்லை நிலம்

**காடும், காடு சார்ந்ததும்**

பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும்
பாஇசை பாடமுப் பழமும் தேனும் தந்
தேஇசை பெறும் கடறு இடையர் முக்குழல்
ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால்

முதிரையும் சாமையும் வரகும் பொய்மணிக்
குதிரைவா லியும்களம் குவித்துக் குன்று எனப்
பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்
அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே!

www.nammakalvi.com



**விளக்கம்:**

நாகணவாய்ப் பறவைகளும், குயில்களும், அழகு மிகப் பொருந்திய வண்டுகளும், பாஇசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில மக்களான ஆயர்கள், மா, பலா, வாழை என்னும் முக்கனிகளையும், தேனையும் சேகரித்துக் கொண்டு, முக்குழல் இசையால் (கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகிய மூன்றினாலும் ஆன குழல்கள்) மேயும், பசுக்கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.

குதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகிய தானியங்களை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்து களத்தில் குன்று போல் குவித்து வைத்திருப்பர். அவர்கள் கதிரடிக்கும் ஓசை அதிர்வு தரும். அவ்வதிர்வின் ஓசை கேட்டு(உழை - பெண்மான்) மான்கள் அஞ்சி ஓடும் தன்மை வாய்ந்தது முல்லை நிலம்.

**சொல்லும் - பொருளும் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூவை | – | நாகணவாய்ப் பறவை | முக்குழல் | – | கொன்றை, ஆம்பல் மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல் |
| பொலம் | – | அழகு | | | |
| பொலங்கை | – | அழகு பொருந்திய | பொதுவர்கள் | – | முல்லை நில மக்கள் |
| இசை பெறும் | – | புகழ் பெற்ற | பொலி | – | தானியக் குவியல் |
| கடறு | – | காடு | உழை | – | ஒரு வகை மான் (பெண் மான்) |

## பாலை நிலம்

**(சுரமும், சுரம் சார்ந்த இடமும்)**

மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ
இன்னிளம் குருளைமிக்கு இனைந்து வெம்பிடத்
தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற
நன்னரில் வலிய செந் நாய்உய ங்குமே

கடிக்கமழ் மராமலர்க் கண்ணி அம்சிறார்
படிக்குற எருத்துக்கோடு அன்ன பாலைக்காய்
வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்
அடிக்கும் ஓசையின்பருந்து அஞ்சி ஓடுமே

**விளக்கம்:**

பாலை நிலம் கொடிய வெம்மையை உடையது. கொடிய வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டியின் வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்ட தாய் செந்நாய் மிகவும் வருந்தியது. குட்டி இளைப்பாறி ஓய்வெடுக்க எங்கும் நிழல் இல்லை. எனவே கடும் வெயிலின் வெம்மையைத் தான் ஏற்று துன்புற்று நின்று தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

சிறுவர்கள் நன்கு மணம் வீசும், மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்ற பாலைக் காய்கள், மரத்தில் இருந்து நிலத்தில் வீழ்ந்து வெடிக்குமாறு, அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்து ஓடின.

**சொல்லும் பொருளும்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மன்னிய | – | கொடிய | கடிகமழ் | – | சிறந்த மணம் வீசும் |
| முதுவெயில் | – | வெப்பம் தரும் வெயில் | மராமலர் கண்ணி | – | மராமலர் மாலை |
| வாய்வெரீஇ | – | சோர்வால் வாய் குழறுதல் | எருத்து | – | எருது |

www.nammakalvi.com



| | | |
|---|---|---|
| குருளை | – | குட்டி |
| இனைந்து | – | துன்புறுதல் |
| உயங்குமே | – | வருந்துமே |
| கோடு | – | கொம்பு |
| படிக்குஉற | – | நிலத்தில் விழ |

## மருதம்

**வயலும் வயல் சார்ந்த பகுதியும்**

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்

நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்

மரைமலர்க் குளத்தில் ஆடும்
மயிர்த்தலைச் சிறுவர் நீண்ட
பொருகரிக் குருத்து அளந்து
பொம்மெனக் களிப்பர் ஓர்பால்

குரைகழல் சிறுவர் போரில்
குலுங்கியே தெங்கின் காயைப்
புரைதபப் பறித்துக் காஞ்சிப்
புனைநிழல்அருந்து வாரே

**விளக்கம்:**

மலையிடைத் தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பி நிற்கும் குளத்து நீரும், முல்லை நிலத்துக் காட்டாறும் மருத நிலத்திலே பாய்ந்தோடும். அங்கு நெற்பயிரினைக் காத்து நிற்பது போல் கரும்பு வளர்ந்து நிற்கும் வயல்கள் காணப்பட்டன. பெருகி வரும் நீரினைக் கால்வாய் வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் மிகுந்த மருத நில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும் அழகுடையது மருதம்.

தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்திலே யானைகளும் நீந்தின. நீராடியதால் கலைந்த தலை மயிரினை உடைய சிறுவர்கள் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறு கழல் அணிந்த சிறுவர்கள் வைக்கோற்போர்கள் குலுங்கும்படி அவற்றின் மீது ஏறி நின்று, தென்னை மரத்திலே இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர் காஞ்சி மர நிழலில் அமர்ந்து இளநீரை அருந்தினர்.

**சொல்லும் பொருளும்:**

| | | |
|---|---|---|
| கல் | – | மலை |
| கல்லிடை | – | மலையிடை |
| முருகு | – | தேன், மணம், அழகு |
| கான்யாறு | – | காட்டாறு |
| மல்லல் | – | வளம் பொருந்திய |
| கரி | – | யானை |
| கரிக்குருத்து | – | யானையின் தந்தம் |
| போர் | – | வைக்கோற்போர் |
| புரைதப | – | குற்றமின்றி |
| செறு | – | வயல் |
| குரை கழல் சிறுவர் | – | ஒலிக்கின்ற கழல் அணிந்த பாதமுடைய சிறுவர்கள் |
| தெங்கின்காய் | – | தென்னை மரத்தின் இளங்காய் (இளநீர்) |

www.nammakalvi.com



## நெய்தல்

### கடலும் கடல் சார்ந்தது

பசிபட ஒருவன் வாடப்
பாத்துஇனி இருக்கும் கீழ்மை
முசிபட ஒழுகும் தூய
முறையினை அறிவார் போல

வசிபட முதுநீர் புக்கு
மலையெனத் துவரை நன்னீர்
கசிபட ஒளிமுத் தோடு
கரையினில் குவிப்பார் அம்மா

வருமலை அளவிக் கானல்
மணலிடை உலவிக் காற்றில்
சுரிகுழல் உலர்த்தும் தும்பி
தொடர்மரை முகத்தர் தோற்றம்

இருபெரு விசும்பிற் செல்லும்
இளமைதீர் மதியம் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங்
காட்சி போல்தோன்று மாதோ

**விளக்கம்:**

தூய ஒழுக்க முறையைப் பின்பற்றுபவர்கள் பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள் (அதற்காக வருத்தப்பட்டு உழைக்காமலோ சோம்பியோ இருப்பதில்லை)

அதுபோல தான் வாழும் இடம் முழுவதும் மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளிமுத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் வந்து குவிப்பர்.

நெய்தல் நிலத்திலே பறக்கும் ஒருவகை வண்டானது. கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, சுடுகின்ற கடற்கரை மணலிடை உலவி தன் நீண்ட சிறகினை உலர்த்தும்.

பின்னர்த் தாமரை மலரை ஒத்த பெண்களின் முகத்தை நோக்கித் தொடர்ந்து பறந்து செல்லும். இக்காட்சியானது வானிலே முழுநிலவினைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது. [முழுநிலவு பெண்ணின் முகத்துக்கும், கருமேகம் - வண்டுக்கும் உவமையாயிற்று]

**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| தூயமுறை | தூய்மையான ஒழுக்க நெறி | கானல் மணலிடை | சுடுகின்ற கடற்கரை மணல் |
| வசிபட | வாழும் இடம் | சுரிகுழல் | நீண்ட சிறகு |
| முதுநீர் | கடல் | மரை | தாமரை மலர் |
| துவரை | பவளம் | விசும்பு | வானம் |
| அளவி | தடவி | கருமுகில் | கருமேகம் |
| மதியம் | நிலவு | | |

**இலக்கணக் குறிப்பு :**

| | | | |
|---|---|---|---|
| இடிகுரல் | உவமைத் தொகை | மன்னிய | பெயரெச்சம் |
| இன்னுயிர் | பண்புத் தொகை | வெரீஇ | சொல்லிசை அளபெடை |
| பிடி பசி | வேற்றுமைத் தொகை | கடிகமழ் | உரிச்சொல் தொடர் |
| பைங்கிளி | பண்புத் தொகை | மரைமுகம் | உவமைத் தொகை |

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| பெருங்கடல் – பண்புத் தொகை | | கருமுகில் – பண்புத் தொகை | |
| முதுவெயில் – பண்புத்தொகை | | அதிர்குரல் – வினைத்தொகை | |
| வருமலை – வினைத் தொகை | | இன்னிளங்குருளை – பண்புத்தொகை | |

பூவையும் குயில்களும் – எண்ணும்மை
முதிரையும் சாமையும் வரகும் – எண்ணும்மை
எருத்துக்கோடு – ஆறாம் வேற்றுமைத் தொகை
கரைபொரு – இரண்டாம் வேற்றுமைத் தொகை
மலர்க்கண்ணி – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்:**

| | |
|---|---|
| **பருகிய - பருகு + இன் + ய் + அ**<br>பருகு - பகுதி<br>இன் - இறந்தகால இடைநிலை (‘ன்’ கெட்டது விகாரம் )<br>ய் - உடன்படுமெய் சந்தி<br>அ - பெயரெச்ச விகுதி | **பூக்கும் - பூ + க் + க் + உம்**<br>பூ - பகுதி<br>க் - சந்தி<br>க் - எதிர்கால இடைநிலை<br>உம் - வினைமுற்று விகுதி |
| **பறித்து - பறி + த் + த் + உ**<br>பறி - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினைமுற்று விகுதி | **குவிப்பார் - குவி + ப் + ப் + ஆர்**<br>குவி - பகுதி<br>ப் - சந்தி<br>ப் - எதிர்கால இடைநிலை<br>ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி |
| **மருண்டு - மருள் (ண்) + ட் + உ**<br>மருள் - பகுதி ‘ள்’ ‘ண்’ ஆனது விகாரம்<br>ட் - இறந்தகால இடைநிலை<br>உ - வினைமுற்று விகுதி | **புக்கு - புகு + உ**<br>புகு - பகுதி (க் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது)<br>உ - வினைமுற்று விகுதி |
| **அஞ்சி - அஞ்சு + இ**<br>அஞ்சு - பகுதி<br>இ - வினையெச்ச விகுதி | |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. ‘பொதுவர்கள் பொலி உறப் போர் அடித்திடும்’ நிலப்பகுதி ..................

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) கெடுதல்

**விடை : இ) முல்லை**

## குறுவினா

**1. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.**

இடிகுரல் - உவமைத் தொகை
பெருங்கடல் - பண்புத் தொகை

**2. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?**

மராமலர்களை மாலையாக அணிந்த சிறுவர்கள், எருதின் கொம்புகளைப் போல் இருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு கோலினால் அடித்தனர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்து ஓடின.

"வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்
அடிக்கும் ஓசையின் பருந்து அஞ்சி ஓடுமே"

## சிறுவினா

**1. இராவண காவியத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டுக.**

**குன்று போல:**

முல்லை நிலத்தவர்கள், முதிரை. சாமை, கேழ்வரகு மணி போன்ற குதிரை வாலி ஆகியவற்றை கதிர் அடித்து களத்தில் குவித்து வைத்திருக்கும் காட்சியானது குன்று போல இருந்தது என்று தானியக் குவியலுக்கு குன்றினை உவமைப்படுத்தியுள்ளார்.

**மதியம் தொடரும் மேகம் போல:**

கடற்கரை மணலிடை உலவி தன் நீண்ட சிறகினை உலர்த்திய வண்டானது, தாமரை மலரை ஒத்த பெண்களின் முகத்தினை நோக்கி தொடர்ந்து செல்லும். அக்காட்சியானது வானில் முழுநிலவைத் தொடர்ந்து செல்லும் ஒரு மேகத்தின் காட்சி போல் உள்ளது என்று உவமைப்படுத்தியுள்ளார் புலவர் குழந்தை.

**2. குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.**

தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகளின் மணமும், அகில் போன்ற வாசனைப் பொருட்களின் நறுமணமும், உலையில் இட்ட மலை நெல் அரிசி சோற்றின் மணமும், குறிஞ்சி நிலம் முழுவதும் பரவிக் கிடந்த காந்தள் மலரின் மணமும், எங்கும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் குறிஞ்சி நிலப்பகுதி முழுவதும் மணந்தது.

## நெடுவினா

**1. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.**

**முன்னுரை:**

பூத்துக்குலுங்கும் பூஞ்சோலை, அடர்ந்து வளர்ந்த பசுமையான மரங்கள் நீர் நிறைந்த நதி, குளக்கரைகள், மயில்கள், குயில்கள், கிளிகள் எனப் பறந்து திரியும் பறவைகள் இத்தகு அழகு சூழலை இராவண காவியத்தில் ஐவகை நிலங்கள் பற்றிக் குறிப்பிடும் பாடல்களில் புலவர் குழந்தை குறிப்பிடுகிறார்.

www.nammakalvi.com



**பொன் மயில் ஆடும்:**

அருவிகள் பறையைப் போல் ஆரவாரமாய் ஒலித்து விழும். பைங்கிளிகள் தாம் அறிந்த இசையினைப் பாடும். பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான அகன்ற சிறகினை விரித்து ஆடும். பூக்கள் நிறைந்த மரக்கிளையில் அமர்ந்திருக்கும் குரங்கினமோ இவற்றையெல்லாம் மிரட்சியுடன் பார்த்துக் கொண்டிருக்கும்.

"............. பொன் மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்".

**குயிலும், வண்டும் இசைக்கும்:**

அழகிய நாகணவாய்ப் பறவைகளும், குயில்களும் அழகுமிக்க சிறகினையுடைய வண்டு இனங்களும், பாவிசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில ஆயர்கள் கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன முக்குழலை இசைத்து, மேயும் பசுக்கூட்டங்களை அருகருகே ஒன்றிணைக்கும் காட்சியும் இன்பம் தருவன.

"தேஇசை பெறும்கடறு இடையர் முக்குழல்
ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால்"

**பூத்துக்குலுங்கும் காஞ்சி, வஞ்சி:**

மலையிடைத் தோன்றும் ஆறும், கரையை மோதித் ததும்பி நிற்கும் குளமும் மனதைக் கொள்ளை கொள்ளும். முல்லை நிலத்தின் காட்டாற்று வெள்ளம் மருத நிலத்தில் பாய்ந்தோடும். நெற் பயிரினைக் காக்கும் பொருட்டு கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் கால்வாய் வழி ஓடி வயலில் தேங்கி வளம் சேர்க்கும். இத்தகு வளம் நிறைந்த நிலத்திலே காஞ்சி மலர்களும் வஞ்சி மலர்களும் பூத்துக் குலுங்கி மனதைப் பரவசப்படுத்தும்.

**"மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்"**

**இளைப்பாற்றும் தாய் :**

வெப்பத்தைத் தாங்க இயலாத தன் குட்டியின் களைப்பை இளைப்பாற்ற எண்ணிய தாய், எங்கும் நிழல் இன்றி தன் நிழலையே அதற்குத் தந்து குட்டியை இளைப்பாற்றும் தாயின் அன்பையும் இயற்கை மூலம் அறியலாம்.

**"தன்னிழல் தங்கவே தாய்மை மீதுர "**

**முடிவுரை:**

மேற்கூறிய தன்மையில், இராவண காவியம் என்னும் இலக்கியமானது, எழிலோவியங்களை, தன் சொல் ஓவியங்களால் தீட்டி வைத்திருக்கிறது. இவற்றைக் கற்க கற்க இன்பமேயன்றி வேறில்லை யன்றோ!

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. இருபதாம் நூற்றாண்டின் தனித்தமிழ் பெருங்காப்பியம்.

அ) கம்பராமாயணம் ஆ) இராவணகாவியம்
இ) தண்ணீர்த்தேசம் ஈ) பொன்னியின் செல்வன்

விடை : ஆ) இராவணகாவியம்

2. இராவண காவியத்தின் பாடல்கள்

அ) 2100 ஆ) 2500 இ) 3100 ஈ) 3500

விடை : ஈ) 3100

3. இருபத்தைந்து நாளில் திருக்குறளுக்கு உரை எழுதியவர்.

அ) புலவர் குழந்தை ஆ) மு. வரதராசனார்
இ) சாலமன் பாப்பையா ஈ) பரிமேலழகர்

விடை : அ) புலவர் குழந்தை

4. யாப்பதிகாரம், தொடையதிகாரம் எழுதியவர்

அ) பெருந்தேவனார் ஆ) வாணிதாசன்
இ) வரந்தருவார் ஈ) புலவர் குழந்தை

விடை : ஈ) புலவர் குழந்தை

5. "மன்னிய" - என்பதன் இலக்கணக்குறிப்பு.

அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) தொழிற்பெயர் ஈ) வியங்கோள் வினைமுற்று

விடை : பெயரெச்சம்

6. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ. | கடறு | i) | கொம்பு |
| ஆ. | கோடு | ii) | காடு |
| இ. | துவரை | iii) | வயல் |
| ஈ. | செறு | iv) | பவளம் |

விடை : அ. ii) ஆ. i) இ. iv) ஈ. iii)

7. "பூவை" - என்பது எப்பறவையைக் குறிக்கும்.

அ) காகம் ஆ) ஆறுமணிக்குருவி
இ) நாகணவாய்ப்பறவை ஈ) நாரை

விடை : இ) நாகணவாய்ப்பறவை.

8. எருதின் கொம்பினைப்போல் இருந்த காய் எது?

அ) பாலைக்காய் ஆ) பாகற்காய் இ) ஏலக்காய் ஈ) வாழைக்காய்

விடை : அ) பாலைக்காய்

9. காஞ்சியும், வஞ்சியும் பூக்கும் நிலம்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

விடை : இ) மருதம்

www.nammakalvi.com



**10. கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆனது .................**

அ) முக்கூடை ஆ) முக்குழல் இ) முத்தளிர் ஈ) முக்கொம்பு

**விடை : ஆ) முக்குழல்**

**11. இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்டவன் ..................**

அ) இராமன் ஆ) அனுமன் இ) இராவணன் ஈ) குகன்

**விடை : இ) இராவணன்**

**12. "மரை முகம்" - என்பதன் இலக்கணக் குறிப்பு**

அ) உம்மைத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) உருவகம் ஈ) உரிச்சொற்றொடர்

**விடை : அ) உவமைத்தொகை**

**13. புரைதபப் பறித்துக் காஞ்சிப்**
**புனை நிழல் அருந்துவாரே - இதில் அமைந்துள்ள நயம்**

அ) அடிமோனை ஆ) சீர்மோனை இ) அடிஎதுகை ஈ) சீர்எதுகை

**விடை : அ) அடிமோனை**

**14. "வருமலை அளவி" - வருமலை என புலவர் எதனைக் குறிப்பிடுகிறார்.**

அ) கடற்காகம் ஆ) கடற்காளான் இ) கடலாமை ஈ) கடல்அலை

**விடை : ஈ) கடல்அலை**

**15. கரிக்குருத்து என்பதன் பொருள் யாது?**

அ) சேவற்கொண்டை ஆ) யானைத்தந்தம்

இ) மான்கொம்பு ஈ) மயிற்தோகை **விடை : ஆ) யானைத்தந்தம்**

**16. 'போர்' அடிக்கும் குரலைக் கேட்டு அஞ்சி ஓடுவது எது?**

அ) உழைமான் ஆ) கவரிமான் இ) கலைமான் ஈ) செந்நாய்

**விடை : அ) உழைமான்**

**17. குருளைக்குத் தன் நிழல் தந்த விலங்கு எது?**

அ) உழைமான் ஆ) செந்நாய் இ) மந்தி ஈ) வானரம்

**விடை : ஆ) செந்நாய்**

## குறுவினா

**1. இராவண காவியம் குறித்து அண்ணாவின் கருத்து யாது?**

- இராவண காவியம் காலத்தின் விளைவு
- ஆராய்ச்சியின் அறிகுறி
- புரட்சிப் பொறி

உண்மையை உணரவைக்கும் உன்னத நூல் என்பது பேரறிஞர் அண்ணாவின் கருத்தாகும்.

www.nammakalvi.com



**2. புலவர் குழந்தை - குறிப்பு வரைக.**

- இராவணக் காவியத்தை இயற்றியவர் புலவர் குழந்தை ஆவார்.
- தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்.

**3. புலவர் குழந்தையின் படைப்புகளில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.**

- யாப்பதிகாரம்
- தொடையதிகாரம்

**4. குரக்கினம் மருண்டு நோக்குமால் - ஏன்?**

- பறையின் ஒசையைப் போல் ஆரவாரமாய் விழும் அருவியோசை.
- பாடுகின்ற பைங்கிளிகள்
- பொன் போன்ற அழகிய சிறகினை விரித்து ஆடும் மயில் இவற்றைக் கண்டு மரத்தில் அமர்ந்திருக்கும் குரங்கு மிரட்சியுடன் நோக்கியது என்று புலவர் குழந்தை குறிப்பிடுகிறார்.

**5. குன்று போல் குவித்து வைக்கப்பட்டிருந்த தானியங்கள் யாவை? எந்நிலத்தில் வைக்கப்பட்டிருந்தது?**

- முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவை குன்று போல் குவித்து வைக்கப்பட்டிருந்தது.
- முல்லை நிலத்தில்.

**6. கோர்வை / கோவை பற்றிய சொற்பொருள் விளக்கம் தருக.**

- கோ என்பது வேர்ச்சொல்.
- கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி.
- எ.கா : ஆசாரக்கோவை, ஊசியில் நூலைக் கோத்தான்.

**7. மைவனம், முருகியம் - என்ற சொற்கள் உணர்த்தும் பொருள் யாவை?**

மலைநெல், குறிஞ்சிப்பறை.

## சிறுவினா

**1. இராவண காவியத்தின் காண்டங்கள் எத்தனை? அவை யாவை?**

இராவண காவியத்தில் ஐந்து காண்டங்கள் உள்ளன. அவையாவன.

1. தமிழகக் காண்டம்,
2. இலங்கைக் காண்டம்
3. விந்தக் காண்டம்
4. பழிபுரிகாண்டம்
5. போர்க்காண்டம் என்பவையாகும்.

**2. மருதநில சிறுவர்களின் மனமகிழ் செயல்பாடுகளை எடுத்தியம்புக.**

தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற்போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

**3. நெய்தல் நில வண்டுகள் பற்றி எழுதுக.**

தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த

www.nammakalvi.com



பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 160

**1. ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம்/ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் படக் கட்டுரையாக்குக.**

என்னுடைய மாவட்டம் கன்னியாகுமரி. ஐவகை நிலங்களில் கடலும் கடல் சார்ந்த நிலமாக இருப்பது என் மாவட்டத்தின் பெருமை.

**கன்னியாகுமரியின் கவின்மிகு காட்சிகள்**

தமிழகத்திற்குத் தென் எல்லையாகத் திகழும் எம் மாவட்டம் இயற்கை அழகுக்குப் பெயர் பெற்றது. சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்.



அரபிக்கடல், வங்காளவிரிகுடா. இந்தியப் பெருங்கடல் ஆகிய முக்கடலும் சங்கமிக்கும் இடம் இது.

இங்கு காணக் கிடைக்கும் சூரிய உதயமும், அஸ்தமனமும் வண்ணத் திருவிழாவாகவும், வானத்தில் பல வர்ணஜாலம் வாரியிறைக்கும் நிகழ்வுகளாகவும் அமைகின்றன. பல வண்ண மணல் நிரம்பிய குமரி கடற்கரை காணக் காண இன்பமே.





தமிழினம் செழிக்க இரண்டடி தந்த வள்ளுவரைப் பெருமைப்படுத்தும் மாவட்டம்.

'எழுமின் விழுமின்'' என்று இளைய மனங்களில் எழுச்சித்தீபம் ஏற்றிய விவேகானந்தரைப் பெருமைப்படுத்தியுள்ளதும் எம் மாவட்டமே.



www.nammakalvi.com





காமராசர் நினைவாலயம், காந்தி மண்டபமும் இங்கு உண்டு.

கடலில் நீராடும் துறை அருகே ஓர் அழகிய சித்திரம் போல் அமையப் பெற்றிருக்கும் குமரியம்மன் கோயில். பழமை வாய்ந்த தேவாலயங்களும் இங்கு இறையாசி வழங்கிக் கொண்டு இருக்கின்றன.





இங்கு புலியை முறத்தால் கொன்ற வீரப் பெண்ணுக்கும், முல்லைக்குத் தேர் தந்த பாரி மன்னனுக்கும் வைக்கப்பட்டுள்ள சிலைகள் கண்ணைக் கவரும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது.

திற்பரப்பில் இருந்து, திருவட்டார் வந்த பின் மாத்தூர் என்ற சிற்றூருக்குச் செல்லும் சாலையில் தொட்டிப் பாலம் உள்ளது. ஆற்றுக்கு மேல் அமைந்துள்ள இப்பாலத்தில் விவசாயத்துக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் கால்வாய் அமைந்துள்ளது தனிச்சிறப்பு.



செல்லும் வழியெங்கும் பசி தீர்க்க பழவகைகள் பலவும் கிடைக்கும். கன்னியாகுமரியை இப்படிச் சொல்லி, சொல்லி வர்ணனை செய்து கொண்டே போகலாம்.

எம் மாவட்டத்திற்கு நீங்களும் ஒருமுறை வாருங்கள். இயற்கை இன்பத்தை அனுபவியுங்கள்.

**2. இப்பாடப் பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சியினை ஓவியமாகத் தீட்டுக.**



கல்லிடைப் பிறந்த ஆறும்
　　கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
　　முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
　　நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
　　வஞ்சியும் மருதம் பூக்கும்

www.nammakalvi.com



**3. வைக்கோற் போர், நெற்கதிர், போரடிக்கும் களம் போன்ற உழவுத் தொழிலோடு தொடர்புடையவற்றின் விளக்கங்களைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.**

மாணவர்களே! இராவண காவியத்தில் ஐவகை நில வளங்களைப் பற்றிக் கற்கும் போது,

வைக்கோற் போர், நெற்கதிர் போரடிக்கும் களம் போன்ற வார்த்தைகளைக் கற்றீர்கள் அல்லவா! அதன் விளக்கங்கள் தெரிந்து கொள்ள ஒரு கலந்துரையாடல்

**கலந்துரையாடுபவர்கள்: ஆசிரியர், புகழேந்தி, சுதா.**

ஐயா : நெற்குதிர் பற்றிச் சொல்லுங்கள் ஐயா!

ஆசிரியர் : கூறுகிறேன் புகழேந்தி.

நெல் முதலிய தானியங்களைச் சேகரிக்கும் கூடு. பெரிய அளவில் இருக்கும் குதிரில் தானியத்தைச் சேமிப்பர். சிறிய அளவில் உள்ளவை விதை தானியங்களைச் சேகரித்து வைக்கவும் உதவும்.

புகழேந்தி : ஐயா! குதிர் பற்றி என் தாத்தா ஏதோ பழமொழி சொல்வாரே ............

ஆசிரியர் : ஆமாடா .........“எங்கப்பன் குதிருக்குள் இல்லை’’. “ஐயா!’’ கதிர் போல அம்மா குதிர் போல ’’ போன்ற பழமொழிகள் உள்ளன.

சுதா :ஐயா போர் அடித்தல் என்றால் என்ன ஐயா!

ஆசிரியர் : அறுவடை செய்த நெல்லையும், வைக்கோலையும் பிரிக்கும் செயல். அகன்ற களத்திற்கு கொண்டு வந்து அடிப்பர். முதலில் அடிப்பதை தலையடி என்பர். பின் வைக்கோலைப் பரப்பி, மாட்டைச் சுற்றி வரச் செய்தும் நெல்லையும், வைக்கோலையும் தனித்தனியே பிரித்தெடுத்தலே போரடித்தல் ஆகும்.

சுதா : ஐயா வைக்கோற்போர் பற்றிச் சொல்லுங்களேன்.

ஆசிரியர் : நெல்லைப் பிரித்து எடுத்த பின் அதன் தாளை உலர்த்தி சேகரிப்பது வைக்கோல். அது கால்நடைகளுக்குக் குறிப்பாக மாடுகளுக்கு உணவாகும். வைக்கோலை ஈரம்படாமல் உலரவைத்து. அதனை அழகாக அடுக்கி குவித்து, காற்றில் பறக்காமல் இருக்க, வைக்கோலாலே பின்னப்பட்ட வைக்கோல் பிறியைக் கொண்டு சுற்றி வைத்துப் பாதுகாப்பதே வைக்கோற் போர் ஆகும்.

புகழேந்தி

சுதா : நன்றி ஐயா எங்கள் தலைமுறைக்குத் தெரியாத செய்திகள் இவை. விளக்கமாக புரிய வைத்து விட்டீர்கள் ஐயா!

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

இயல் ஆறு

# நாச்சியார் திருமொழி

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்ற செய்வதும், சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணிகள்.

இறைவனை நாயகனாக எண்ணி ஆண்டாள் பாடிய பாடல் அழகியலுக்கும், பக்திக்கும் சான்றாகிறது.

**நூல் குறிப்பு:**

- ஆழ்வார்கள் பன்னிருவரால் பாடப்பட்ட நூல் "நாலாயிர திவ்ய பிரபந்தம்" இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள, திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரு தொகுதிகள் ஆண்டாள் அருளியவையாகும். நாச்சியார் திருமொழி மொத்தம் 140 பாடல்களைக் கொண்ட நூல்
- நம் பாடப்பகுதியின் இருபாடல்களும் ஆறாம் திருமொழியில் இடம் பெற்றுள்ளன.ஆண்டாள், இறைவன் மீது கொண்ட காதல் மனத்தைக் கூறும் நூல் இது என்பர்.

**ஆண்டாள் பற்றிய குறிப்புகள்:**

- பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார்.
- இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு, தான் அணிந்து மகிழ்ந்த பூ மாலையையும் சூட்டியதால் "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" எனப் புகழப்பட்டார். இறைவனே அவர் சூடிய மாலையைச் சூட விரும்புவாராம்.
- இவ்வாறு ஆண்டவனையே ஆண்டதால் ஆண்டாள் எனப்பட்டாள். இவர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆவார்.

**பாடலின் பொருள்**

நடனம் ஆடும் இளம்பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள்.

வடமதுரையை (மதுராபுரி) ஆளும், மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்து கொண்டு, புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.

இவ்வாறு கண்ணன் வரும் காட்சியைத் தன் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

மத்தளம் முதலான இசைக் கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர்.

அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ் என்னைத் திருமணம் செய்து கொள்கிறான். இக்காட்சியைத் தன் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

**சொல்லும் பொருளும் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கதிரொளி | – | சூரியனின் ஒளி | தீபம் | – | விளக்கு |
| சதிரிள மங்கை | – | நடனமாடும் மங்கையர் | சங்கம் | – | சங்கு |

www.nammakalvi.com



சதிர் – நடனம் | தாமம் – மாலை

மதுரையார் மன்னன் – மதுராபுரியை ஆளும் கண்ணன்

**இலக்கணக் குறிப்புகள் :**

| | | |
|---|---|---|
| கொட்ட | - | வினையெச்சம் |
| முத்துடைத் தாமம் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| கைத்தலம் | - | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| வரிசங்கம் | - | இரண்டாம் வேற்றுமைத் தொகை |

**பகுபத உறுப்பிலக்கணம் :**

**தொட்டு - தொடு (தொட்டு) + உ**

| | | |
|---|---|---|
| **தொடு** | - | பகுதி 'ட்' ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது, |
| **உ** | - | வினையெச்ச விகுதி |

**ஏந்தி - ஏந்து + இ**

| | | |
|---|---|---|
| **ஏந்து** | - | பகுதி, |
| **இ** | - | வினையெச்ச விகுதி |

**கண்டேன் - காண் (கண்) + ட் + ஏன்**

| | | |
|---|---|---|
| **காண்** | - | பகுதி 'கண்' எனக் குறுகியது விகாரம் |
| **ட்** | - | இறந்தகால இடைநிலை |
| **ஏன்** | | தன்மை ஒருமை வினைமுற்று விகுதி |

**நின்று - நில் (ன்) + ற் + உ**

| | | |
|---|---|---|
| **நில்** | - | பகுதி 'ல்' 'ன்' ஆனாது விகாரம் |
| **ற்** | | இறந்தகால இடைநிலை |
| **உ** | - | வினையெச்ச விகுதி |

**வந்து - வா (வ) + த் (ந்) + த் + உ**

| | | |
|---|---|---|
| **வா** | - | பகுதி 'வ்' எனக் குறுகியது விகாரம் |
| **த்** | - | சந்தி 'ந்' ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **உ** | - | வினையெச்ச விகுதி |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்.**

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

**விடை : ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்**

www.nammakalvi.com



## குறுவினா

**1. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?**

- கண்ணன் புகுந்த பந்தலானது முத்துக்களையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்டதாக இருந்தது.
- மத்தளம் முழங்கியதாகவும், வரிகளை உடைய சங்குகளை ஊதுபவர்கள் நின்று கொண்டிருந்தனர் என்று, கண்ணன் புகுந்த பந்தல் இருந்த நிலையை ஆண்டாள் கூறுகிறாள்.

"மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத
முத்துடை தாமம் நிரை தாழ்ந்த பந்தற்"

## சிறுவினா

**1. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.**

- சதிராடும் இளம்பெண்கள், தம் கைகளில் கதிரவன் போன்ற ஒளியையுடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர் கொண்டு அழைக்கிறார்கள்.
- மதுராபுரியை ஆளும் மன்னனாம் கண்ணன், பாதங்களில் பாதுகை அணிந்து கொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.
- மத்தளம் முழங்க, வரி சங்கம் ஊத, முத்துக்களையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ் என்னைத் திருமணம் செய்து கொள்கிறான் என்று ஆண்டாள் கனவு கண்டதாகக் கூறுகிறாள்.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. அடுப்பிடு சாந்த மோடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும் .................. இவ் அடிகளில் உள்ள நயங்கள்.**

அ) அடியெதுகை, அடிஇயைபு ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடிமோனை, அடிஇயைபு ஈ) சீர்மோனை, சீர்இயைபு

**விடை : அ) அடியெதுகை, அடிஇயைபு**

**2. திருமாலை வழிபட்டு சிறப்புநிலை எய்தியவர்கள் ..................**

அ) நாயன்மார்கள் ஆ) ஆழ்வார்கள் இ) சமணர்கள் ஈ) தேவர்கள்

**விடை : ஆ) ஆழ்வார்கள்**

**3. ஆண்டாள் யாருடைய வளர்ப்பு மகள்?**

அ) நம்மாழ்வார் ஆ) பேயாழ்வார் இ) பெரியாழ்வார் ஈ) பூதத்தாழ்வார்

**விடை : இ) பெரியாழ்வார்**

**4. நாச்சியார் திருமொழியில் உள்ள பாடல்கள்**

அ) 110 ஆ) 140 இ) 120 ஈ) 150

**விடை : ஆ) 140**

**5. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு ................. ஆகும்.**

அ) பெரியபுராணம் ஆ) நாலாயிரதிவ்ய பிரபந்தம்
இ) நளவெண்பா ஈ) பூதத்தாழ்வார்

**விடை : ஆ) நாலாயிர திவ்ய பிரபந்தம்**

**6. நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் ஆண்டாள் பாடியவை யாவை?**

அ) திருப்பாவை ஆ) நாச்சியார் திருமொழி

i) அ - சரி ii) ஆ - சரி iii) இரண்டும் சரி iv) இரண்டும் தவறு

**விடை : iii) இரண்டும் சரி**

**7. "மதுரையார் மன்னன் அடிநிலை" - மதுரையார் மன்னன் யார்?**

அ) கண்ணன் ஆ) கன்னன் இ) கோவலன் ஈ) நெடுஞ்செழியன்

**விடை : அ) கண்ணன்.**

**8. கைத்தலம் இலக்கணக்குறிப்பு யாது?**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

**விடை : இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

**9. பொருத்துக.**

| | |
|---|---|
| அ. தாமர் | i) நடனம் |
| ஆ. சதிர் | ii) நிலவு |
| இ. மதியம் | iii) சந்தனம் |
| ஈ. சாந்தம் | iv) மாலை |

**விடை : அ. iv) ஆ. i) இ. ii) ஈ. iii)**

## குறுவினா

**1. ஆண்டாள் - குறிப்பு வரைக.**

- திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்களுள் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார்.
- இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்கொடி" என அழைக்கப் பெற்றார்.
- இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர்.

**2. ஆண்டாள் பாடியதாகக் குறிப்பிடப்படும் இரு தொகுதிகள் யாவை?**

- திருப்பாவை
- நாச்சியார் திருமொழி

## நெடுவினா

**1. கண்ணனைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுவனவற்றை விளக்குக.**

**முன்னுரை:**

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்றுதலும் அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணியாக இருந்தது. திருமாலை நாயகனாக எண்ணி ஆண்டாள் பாடுவதாக அமைந்தது நாச்சியார் திருமொழி ஆகும்.

www.nammakalvi.com



**ஆண்டாளின் கனவும், கண்ணனும்**

'ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்துகொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

'மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், என்னைத் திருமணம் செய்து கொள்கிறான்' எனக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

**முடிவுரை :**

கண்ணன் மீது ஆண்டாள் கொண்ட காதலின் வெளிப்பாடே கனவாக மலர்ந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 162

**1. திருப்பாவையில் இடம் பெற்றுள்ள தொடை நயம் மிக்க பாடல்களுள் எவையேனும், இரண்டினை இணையத்திலோ நூலகத்திலோ திரட்டி வகுப்பறையில் பாடுக.**

**திருப்பாவைப்பாடல் (24)**

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி
சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்ப் புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி

வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்றும் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

**பாடல் - 15 (திருப்பாவை)**

எல்லே இளங்கிளியே இன்னம் உறக்குதியோ
சில்லென்று அழையேன் மின் நங்கை மீர்போதருகின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக் கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்.

**2. கண்ணனைப் பல்வேறு உறவு நிலைகளில் வைத்துப் பாடிய பாரதியார் பாடல்களும் உங்களைக் கவர்ந்த பாடல்களைக் குறித்துக் கலந்துரையாடுக.**

மாணவர்களே, ஆண்டாள் கண்ணனைத் தன் நாயகனாக எண்ணியது போல்.

பாரதியாரும் கண்ணனை தோழனாக (கண்ணன் என் தோழன்)

தாயாக (கண்ணன் என் தாய்) தந்தையாக (கண்ணன் என் தந்தை)

சேவகனாக (கண்ணன் என் சேவகன்), விளையாட்டுப் பிள்ளை

(கண்ணன்-என் விளையாட்டுப் பிள்ளை), காதலனாக (கண்ணன் என் காதலன்) என்று பல நிலைகளில் வைத்துப் பாடியுள்ளார்.

**சான்று :**

**விளையாட்டுப்பிள்ளை**

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை தீராத .........
புல்லாங்குழல் கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்பும் நற் கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போல - அதைக்
கண்மூடி வாய் திறந்தே கேட்டிருப்போமே ........

இப்பாடலில் குழலிசைத்து அனைவரையும் மயக்கும் குழந்தையாக எண்ணிப்பாடியுள்ளார் அல்லவா .......

**மாணவர் :**

ஐயா ....... தோழனாக என்று சொன்னீர்கள் அதற்கு ஒரு சான்று சொல்லுங்கள் ஐயா!

" பிழைக்கும் வழிசொல்ல வேண்டுமென்றால்'' ஒரு
பேச்சினிலே சொல்லுவான்
உழைக்கும்வழிவினைஆளும் வழி - பயன்
உண்ணும் வழியுரைப் பான்
அழைக்கும் பொழுதினில் போக்குச் சொல்லாமல்
அரைநொடிக்குள் வருவான்
மழைக்குக் குடை பசி நேரத்துணவு என்றன்
வாழ்வினுக் கெங்கள் கண்ணன்.

தோழனாக கண்ணன் வாழ வழி சொல்வானாம். கூப்பிடும் போது அரை நொடிக்குள் வருவானாம். மழைக்குக் குடையாவான்; பசிக்கு உணவாவான்; என்றன் வாழ்வே என் கண்ணன் என்கிறார்.

மாணவர்களே இதன் மூலம் பாரதி கண்ணனைத் தோழனாய்க் கொண்டார் என்பதையும், நண்பன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் கூறுகிறார்.

நல்ல நண்பன் வாழ வழிகாட்டவேண்டும், துன்பம் வரும் போது நம்மைத் தாங்குகிறவனாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.

**மாணவர்கள் :** நன்றி ஐயா! ......

www.nammakalvi.com



**3. சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள பெண்புலவர்களின் சில கவிதைகளைக் கொண்டு ஒரு கவிதைத் தொகுப்பு உருவாக்குக.**

**ஔவையார் பாடல்**

முட்டு வேன்கொல் தாக்குவேன் கொல்
ஓரேன் யானும் ஓர் பெற்ற மேலிட்டு
ஆஅஒல் எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவலி அலைப்பஎன்
உயவு நோய் அறியது துஞ்சும் ஊர்க்கே (குறுந்தொகை - 28)

**ஒக்கூர் மாசாத்தியார்**

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் - மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந் தன்னே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழு நன்
பெரு நிரை விலக்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீகிப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்க என விடுமே (புறநானூறு)

**சல்மாவின் கவிதை**

தன் வழி தவறி
அறைக்குள் சிக்கிய
பட்டாம் பூச்சி துவக்கிற்று
தன் தேடலை ..........
என்றேனும் ..........
கதவு திறந்து வழி
கிடைக்குமெனில் அது
பறந்து தான் போகும்
வர்ணங்கள் இல்லையென்றாலும் .........

**உமா மகேஸ்வரி**

வெளிவாசல் வழியே
சலித்த மதியம்
சாக்கடை நீரருந்தும் குருவி
உதிர்கிற மென்மையும்
உடைபடாக் கடினமுமாய்
விசித்திரமாய் உடைந்த
மௌனம் ........

※※⁂⁂⁂※※

விரிவானம்

# இயல் ஆறு

# செய்தி

தி. ஜானகிராமன்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் "செய்தி" கதையின் மூலமாக விளக்குக.**

**முன்னுரை:**

இசை மொழியைக் கடந்தது. அமைதியின் நாக்காகப் பேசுவது, மனங்களைக் கரைத்து அந்தரவெளியில் உலவச் செய்வது. இசையின் செவ்வியைத் தலைப்படும் மனமானது, இனம், நாடு என்ற எல்லைக் கோடுகளைத் தாண்டி அகிலத்தையும் ஆளும் இயல்புடையது.

இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் செய்தி என்னும் கதை உணர்த்துகிறது.

**வித்வானின் வருகையும், அறிமுகமும்:**

நாதசுர வித்வான் மாட்டு வண்டியிலிருந்து இருந்து தன் மகன் தங்கவேலுவும், ஒத்துக்காரரும் வாத்தியங்களைத் தூக்கிக் கொண்டு பின்னாக வர, வக்கீல் வீட்டிற்குள் நுழைந்தார் நாதசுர வித்வான்.

வக்கீல் வீட்டில் "பிலிப் போல்ஸ்கா" என்பவர் தலைமையில் மேற்கத்திய சங்கீதகுழுவினர் அமர்ந்திருந்தனர். வக்கீல் வித்வானிடம் இவர் தான் பிலிப்போல்ஸ்கா. இக்குழுவின் தலைவர் என்று அறிமுகப்படுத்தி, பின் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

**கீர்த்தனம் தொடங்கினார்:**

வித்வான் கம்பீரமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனம் தொடங்கினார். டையும், கால் சட்டையுமாக சப்பணம் கட்டி அமர்ந்திருந்த கூட்டம் அசையாது பார்த்துக் கொண்டிருந்தது.

போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. அமிர்த தாரையாகப் பெருக்கெடுத்த நாதப்பொழிவில் அவன் தன்னை இழந்தான். நாதம் அவனுடைய ஆன்மாவைக் காணாத லோகத்துக்கும், அனுபவத்துக்கும் இட்டுச் சென்றது.

இந்த அனுபவத்தினை அடைவதற்குப் போல்ஸ்காவுக்கு நாடோ, மொழியோ, இனமோ தடையாய் இல்லை.

**சாமாராகம் :**

தஸரிமா....... மா" என்று ஆரம்பித்த ராகம் கொஞ்சம் - கொஞ்சமாய் மலர்ந்து, அமைதியான மணம் வீசும் பவழமல்லி போல் உள்ளத்தில் தோய்ந்தது வக்கீலுக்கு .... மொழி தெரியாத போல்ஸ்காவைத் திரும்பிப் பார்த்தார் வக்கீல்......

www.nammakalvi.com



அவன்உடல்ராகத்தோடுஇசைந்துஅசைந்துகொண்டிருந்தது.திடீரென்றுஉட்கார்ந்திருந்தவன் எழுந்து விட்டான். மெல்லிய காற்றில் அசையும் சம்பங்கி மரம் மாதிரி ஆடினான். மேடைக்கருகில் வந்து முழந்தாளிட்டு உட்கார்ந்து கையை மேடையோரத்தில் வைத்து முகத்தைப் புதைத்து தவத்தில் ஆழ்ந்தவன் போல் ஆனான்.

சாமா ராகத்தை ........ அனுபவிக்க அவனுக்கு மொழியோ, இனமோ இடையூறு செய்யவில்லை.

**சாந்தமுலேகா.......**

சாந்தமுலேகா ...... குழந்தையைக் கொஞ்சுவது போல், அந்த அடி கொஞ்சியது. போல்ஸ்காவின் மெய் சிலிர்த்தது. அவனது தலையும், உள்ளமும் ஆன்மாவும் அசைந்து ஊசலிட்டுக் கொண்டிருந்தன ..........

அந்த இசை எனக்காக அனுப்பிய செய்தி ..... உலகத்துக்கே ஒரு செய்தி ....... உங்கள் சங்கீதத்தின் செய்தி உணர்வை வெளிப்படுத்த, நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் போல்ஸ்கா தடுமாறினான் ......

என்ன என்றார் வித்வான் ........

**வக்கீல் மொழி பெயர்த்தல்:**

தன் உணர்வை போல்ஸ்கா கூற ஆரம்பித்தான். இரைச்சல், கூச்சல், அடிதடி, புயல், அலை, இடி என ..... ஒரே இரைச்சல்...... அத்தகு போர்க்களத்தினுள் நான் மட்டும் அமைதியைக் காண்பது போல் உணர்கிறேன்; காண்கிறேன். இனி இரைச்சலும், சத்தமும், யுத்தமும் என்னைத் தொடாது .... இந்த அமைதி எனக்குப் போதும் என்று அவன் உணர்ந்து கூறிய செய்தியை மொழி பெயர்த்தார் வக்கீல்.

**வித்வானின் திகைப்பு:**

அமைதியா ...... அப்படியா தோணித்து அவருக்கு .... நான் வார்த்தையைக் கூடச் சொல்லவில்லையே ......

மிஸ்டர் போல்ஸ்கா நீங்கள் உணர்ந்தது போல், புயல், இடி என்று சொல்லாவிட்டாலும், இப்பாடல் அமைதி அமைதி என்று அமைதியையே கடைசி இலட்சியமாக இறைஞ்சுகிறது .......... என்று திகைத்துக் கூறினார்.

**போல்ஸ்கோ ...... பாராட்டல்:**

இசையை வாசித்த இந்தக் கையைக் கொடுங்கள். கடவுள் நர்த்தனமாடுகிற இந்த விரல்களைக் கொடுங்கள். நான் கடவுளை முகர்ந்து முத்தமிடுகிறேன் என்று வித்வானின் விரலைப் பிடித்து உதட்டில் வைத்துக் கொண்டார் போல்ஸ்கா ..........

**முடிவுரை:**

நாடு, மொழி, இனம் கடந்து வார்த்தைகள் அறிய மொழி தெரியவில்லையெனினும் இசை உணர்த்தும் மெய்ப்பொருளை, அமைதியைப் போல்ஸ்கா உணர்ந்து விட்டான். இசை சொற்களைப் புறக்கணித்துத் தனக்குள் இருக்கும் செய்தியை எந்த மொழி பேசும் மனித மனங்களுக்குள்ளும் செலுத்தி விடும்.

இசையை உணர, அனுபவிக்க அதன் மெய்ப்பொருள் அறிய நாடு, மொழி, இனம் தேவையில்லை.

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. செய்தி கதையின் தலைமை மாந்தர் யார்?**

அ) தங்கவேலு ஆ) மணி இ) பிலிப் போலஸ்கா ஈ) ஜானகிராமன்

**விடை : இ) பிலிப் போல்ஸ்கா**

**2. சாகித்ய அகாதெமி விருது பெற்ற ஜானகிராமனின் நூல் எது?**

அ) சக்தி வைத்தியம் ஆ) கருங்கடலும் கலைக்கடலும்

இ) நடந்தாய் வாழி காவேரி ஈ) அடுத்த வீடு ஐம்பது மைல்

**விடை : அ) சக்தி வைத்தியம்**

**3. அப்பாவின் சிநேகிதர் நூலின் ஆசிரியர்**

அ) அகிலன் ஆ) அசோகமித்திரன் இ) ஆதவன் ஈ) நாஞ்சில் நாடன்

**விடை : ஆ) அசோகமித்திரன்**

**4. தி.ஜானகிராமன் சாகித்யஅகாதெமி விருது பெற்ற ஆண்டு**

அ) 1969 ஆ) 1979 இ) 1989 ஈ) 1999

**விடை : ஆ) 1979**

**5. செய்தி என்னும் சிறுகதை இடம் பெற்ற நூல் எது**

அ) சிவப்பு ரிக்ஷா ஆ) மின்சாரப்பூ

இ) ஒரு சிறு இசை ஈ) முதலில் இரவு வரும்

**விடை : அ) சிவப்புரிக்ஷா**

## குறுவினா

**1. தி. ஜானகிராமன் - குறிப்பு வரைக.**

- தஞ்சை மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர்
- உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராக இருந்தவர்.

**2. செய்தி என்னும் சிறுகதை உணர்த்தும் பொருள் யாது?**

செய்தி என்னும் சிறுகதை சிவப்பு ரிக்ஷா என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. மிகவும் உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும் போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.

**3. தஞ்சாவூர் தமிழக்கு அளித்த கொடையாக விளங்குபவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- உ.வே.சாமிநாதர்
- தி.ஜானகிராமன்
- தஞ்சை இராமையா தாஸ்
- மௌனி
- தஞ்சை பிரகாஷ்
- தஞ்சாவூர்க் கவிராயர்

www.nammakalvi.com



## சிறுவினா

**1. சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச்சிறுகதையாளர்கள் ஐந்துபேரைக் குறிப்பிடுக.**

- கு. அழகிரிசாமி
- அசோகமித்திரன்
- வண்ணதாசன்
- தி. ஜானகிராமன்
- நாஞ்சில் நாடன்

**2. இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாகக் காட்டுவது நாகசுரம். ஆய்ந்தறிக!**

- இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக் கருவிகளில் நாதசுரமும் ஒன்று. மங்கலமான பல நிகழ்வுகளில் இக்கருவி இசைக்கப்படுகிறது.
- இந்தச் சிறப்பான கருவி 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் இந்தக் கருவி கூறப்படவில்லை. 13 ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள எந்தப் பதிவுகளிலும் இந்தக் கருவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை.
- தமிழகப் பழைமை வாய்ந்த கோவில் சிற்பங்களிலும் இந்தக் கருவி காணப்படவில்லை. ஆகவே இந்தக் கருவி 13 ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகிறது.
- நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட ஆச்சா மரத்துண்டுகளை நீண்ட நாள்கள் வைத்திருந்த பிறகே இக்கருவி உருவாக்கப்படுகிறது.
- எனவே பழைய வீடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஆச்சா மரக்கட்டைகளைக் கொண்டே நாகசுரம் செய்யப்படுகிறது. நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக் கொண்டு செய்யப்படுகிறது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 167

**1. உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறெதுவும் இல்லை - இத்தொடர் குறித்துச் சொற்போர் நிகழ்த்துக.**

### சொற்போர்

“நாளெல்லாம் நன்றொலிக்கும். பாட்டினிலே, நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்'' என்றார் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

“இசையால் வசமாகா இதயம் எது'' என்றார் மற்றொரு கவிஞர். இசை வாடிய பயிரை வளரச் செய்யும்; மழையைப் பொழியச்செய்யும்; எல்லா வல்ல இறைவனையும் தன் வசப்படுத்திக் கொள்ளும் பேராற்றல் வாய்ந்த இசை, உலகில் அமைதியையும் ஏற்படுத்தும் எனில் மிகையாகாது.

“அழகான இசை அது மனித குலத்தின்

உண்மையான நம்பிக்கை''. அன்பையும், அமைதியையும், மன உருக்கத்தையும் இசையால் ஏற்படுத்த முடியும்

உலக அமைதிக்காக ஒவ்வொரு ஆண்டும், ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் இசை விழா நடத்தப்படுகிறது. ஆம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் இவ்விழா நடைபெற்று வருகிறது.

www.nammakalvi.com



நம் நாட்டிலும் சிதம்பரம் போன்ற கோவில்களில் உலக அமைதிக்காக, பல மணி நேரங்கள் தொடர் இசை (சான்றாக 12 மணி நேரம், 28 மணி நேரம்) நடத்தப்படுகிறது. அவ்விழாவில் பல மொழி பேசுபவர்கள், பல நாட்டவர்கள் கலந்து கொள்கின்றனர். அங்கு, இசை மட்டுமே ஆளுகை செய்கிறது. நாடோ, மொழியோ, பணமோ, பதவியோ, உயர்வோ, தாழ்வோ அல்ல என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இசை என்றால் "ஒழுங்கு" என்றும் "இசையவைப்பது" என்றும் பொருள் உண்டு. இயற்கையைத் தன் வசப்படுத்தி, இறைவனையே தன் வசப்படுத்தி, இறைவனையே ஆட்கொள்ளும் இசை மனித மனங்களில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் இசைந்து போகச்செய்யும் ஆற்றல் உடையது. எனவே உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறொன்றும் இல்லை.

**2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள உங்களுக்குப் பிடித்த செய்யுள் பகுதிகளை வகுப்பில் இசையுடன் பாடி மகிழ்க.**

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

※※⁂⁂⁂※※

*கற்கண்டு*

# இயல் ஆறு — புணர்ச்சி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. மரவேர் என்பது ............... புணர்ச்சி**

அ) இயல்பு  ஆ) திரிதல்  இ) தோன்றல்  ஈ) கெடுதல்

**விடை : ஈ) கெடுதல்**

### சிறுவினா

**1. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| "கை பிடி" | – | கையைப் பிடித்துக் கொள் என்று பொருள். | |
| "கைப்பிடி" | – | கைப்பிடி அளவைக் குறிப்பது. (ஒரு கைப்பிடி பருப்பு கொடு) | |
| கை + பிடி | → | கைபிடி | – இயல்புப் புணர்ச்சி ஆகும். |
| கை + பிடி | → | கைப்பிடி (தோன்றல்) | – விகாரப்புணர்ச்சி ஆகும். |

www.nammakalvi.com



# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. எழுத்து வகையால் சொற்கள் ............... வகைப்படும்.**

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

**விடை : இ) 4**

**2. நிலை மொழி ஈற்றில் இ, ஈ, ஐ வரும் போது இடம்பெறும் உடம்படுமெய் ................**

அ) யகர உடம்படுமெய் ஆ)வகர உடம்படுமெய்

இ) இரண்டும் வரும் ஈ) இரண்டும் வராது

**விடை : யகர உடம்படுமெய்**

**3. வட்டு + ஆடினான் = எவ்வகை புணர்ச்சியில் வரும்?**

அ) பண்புப்பெயர்ப் புணர்ச்சி ஆ) குற்றியலுகரப்புணர்ச்சி

இ) இயல்பு புணர்ச்சி ஈ) திசைப்பெயர் புணர்ச்சி

**விடை : ஆ) குற்றியலுகரப்புணர்ச்சி**

**4. விகாரப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களில் இடம்பெறுபவை**

அ) தோன்றல் ஆ) திரிதல் இ) கெடுதல் ஈ) விரிதல்

i) முதல் மூன்றும் சரி ii) முதல் இரண்டும் சரி

iii) இறுதி மூன்றும் சரி iv) அனைத்தும் சரி

**விடை : i) முதல் மூன்றும் சரி**

**5. காது, பேசு - இது எவ்வகைக் குற்றியலுகரம்.**

அ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

இ) வன்தொடர்க் குற்றியலுகரம் ஈ) மென்தொடர்க் குற்றியலுகரம்

**விடை : ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்**

**6. பொருத்தமானதைத் தேர்க.**

1. நாக்கு - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
2. நெஞ்சு - இடைத்தொடர்க் குற்றியலுகரம்
3. மார்பு - மென்தொடர்க் குற்றியலுகரம்
4. முதுகு - வன்தொடர்க் குற்றியலுகரம்

அ) 4, 3, 2, 1 ஆ) 4, 2, 3, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 1, 2, 3, 4

**விடை : அ) 4, 3, 2, 1**

## குறுவினா

**1. உடம்படு மெய் என்றால் என்ன? அவை யாவை?**

- உயிர் எழுத்தை இறுதியில் கொண்ட சொல்லும், உயிர்எழுத்தை முதலாக உடைய சொற்களும் வரும்போது, அவற்றை ஒன்று சேர்க்க ஒரு மெய் தோன்றும் அதுவே உடம்படுமெய் ஆகும்.
- அவை: யகர உடம்படுமெய், வகர உடம்படுமெய் ஆகும்.

## சிறுவினா

**1. இயல்புப் புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி - விளக்குக.**

**இயல்புப் புணர்ச்சி**

- புணர்ச்சியின் போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்புப்புணர்ச்சி எனப்படும்.
- **சான்று :** மண் + மலை = மண்மலை

**விகாரப் புணர்ச்சி**

- புணர்ச்சியின் போது மாற்றங்கள் நிகழ்ந்தால் அது விகாரப்புணர்ச்சி எனப்படும். மாற்றம் மூன்று நிலைகளில் வரும். [தோன்றல், திரிதல், கெடுதல்]
- **சான்று :** கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை

**2. குற்றியலுகரப் புணர்ச்சியைச் சான்று தந்து விளக்குக.**

- வட்டு + ஆடினான் = வட்(ட்+உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்
- நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.
- குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரத்துக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும். உறவு + அழகு = உற(வ்+உ) + அழகு = உறவ் + அழகு = உறவழகு

## கற்பவை கற்றபின்

பக்கம்: 170

**1. எழுத்து வகை அறிந்து பொருத்துக.**

1. இயல் – அ) உயிர் முதல் உயிரீறு
2. புதிது – ஆ) உயிர் முதல் மெய்யீறு
3. ஆணி – இ) மெய்ம்முதல் மெய்யீறு
4. வரம் – ஈ) மெய்ம்முதல் உயிரீறு

**விடை: 1) ஆ, 2) ஈ, 3) அ, 4) இ**

**2. புணர்ச்சிகளை "முதல், ஈற்றுச்" சொல் வகையால் பொருத்துக.**

1. செல்வி + ஆடினாள் – அ) மெய்யீறு + மெய்ம்முதல்
2. பாலை + திணை – ஆ) மெய்யீறு + உயிர் முதல்
3. கோல் + ஆட்டம் – இ) உயீரிறு + உயிர் முதல்
4. மண் + சரிந்தது – ஈ) உயிரீறு + மெய்ம்முதல்

**விடை: 1) இ, 2) ஈ, 3) ஆ, 4) அ**

**3. சேர்த்து எழுதுக:**

அ) தமிழ் + பேசு – தமிழ் பேசு
ஆ) தமிழ் + பேச்சு – தமிழ்ப்பேச்சு
இ) கை + கள் – கைகள்
ஈ) பூ + கள் – பூக்கள்

**4. பொருத்தமான உடம்படு மெய்யுடன் இணைக்க.**

அ) பூ + இனம் – பூவினம் (வகர உடம்படு மெய்)
ஆ) இசை + இனிக்கிறது – இசையினிக்கிறது (யகர உடம்படுமெய்)
இ) திரு + அருட்பா – திருவருட்பா (வகர உடம்படு மெய்)
ஈ) சே + அடி – சேவடி (வகர உடம்படுமெய்)

www.nammakalvi.com



**சிந்தனை கிளர் வினாக்கள்:**

**அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுதுக.**

- குற்றியலுகரத்தில் வரும் "உ" கரமானது தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து அரை மாத்திரையாக குறுகி ஒலிக்கும்.
- முற்றியலுகரத்தில் வரும் "உ" கரமானது தன் ஒரு மாத்திரை அளவில் குறையாது ஒலிக்கும்.

**ஆ) புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும் - இக்கூற்றை ஆய்க.**

ஒரு சொல்லைப் பிரித்தால் வரும் நிலைமொழி + வருமொழி - எவ்வாறு புணரும் என்பதை அறியும் பொழுதுதான் உரைநடை எழுதும் போது ஏற்படும் ஒலி நிலை மாற்றங்களை உணர்ந்து எழுத இயலும். வல்லினம், மிகும் மற்றும் மிகாவிடங்கள், சொற்சேர்க்கை ஆகியன உரைநடைக்கு இன்றியமையாதாகும். அவற்றைத் தெறிவாகத் தருவது புணர்ச்சி இலக்கணம் எனவே புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுத உதவும்.

**இ) கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.**

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். 'அ + கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை' யின் தோற்றத்திற்கான சான்றாக 'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள்' இருந்ததை மணிமேகலை மூலம் 'அறிய + முடிகிறது'.

| | | | |
|---|---|---|---|
| 1. | தொன்மை +ஆன | = | தொன்மையான |
| 2. | நூல் + ஆகிய | = | நூலாகிய |
| 3. | தொல்காப்பியம் + இல் | = | தொல்காப்பியத்தில் |
| 4. | சிற்பம் + கலை | = | சிற்பக்கலை |
| 5. | அ + கல்லில் | = | அக்கல்லில் |
| 6. | தமிழக + சிற்பம் + கலை | = | தமிழகச் சிற்பக்கலை |
| 7. | இதனை + கொள்ளலாம் | = | இதனைக் கொள்ளலாம் |
| 8. | கண்ணகிக்கு + சிலை | = | கண்ணகிக்குச் சிலை |
| 9. | சுதை + சிற்பங்கள் | = | சுதை சிற்பங்கள் |
| 10. | அறிய + முடிகிறது | = | அறிய முடிகிறது |

**ஈ) படக்காட்சியிலிருந்து இரு சொல் தொடர்களை அமைத்து, அவற்றின் புணர்ச்சி வகையினைக் கண்டறிக.**



www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| (எ.கா) மரக்கிளை | = மரம் + கிளை | மரக்கிளை | – திரிதல் விகாரப்புணர்ச்சி, |
| மூன்று பெண்கள் | = மூன்று + பெண்கள் | மூன்றுபெண்கள் | – இயல்புப் புணர்ச்சி |
| அ) நிறைகுடம் | = நிறை + குடம் | நிறைகுடம் | – இயல்புப் புணர்ச்சி |
| ஆ) உழவுத் தொழில் | = உழவு + தொழில் | உழவுத் தொழில் | – தோன்றல் விகாரப் புணர்ச்சி |

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 173

**படித்துச் சுவைக்க.**

வான் தந்த பாடம்
எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு,
நீ அதில் சிற்றெறும்பே,
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித்தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள் தாம் பேசல் என்னே!
-பாவேந்தர் பாரதிதாசன்

The Lesson the sky Teaches
How Vast is the sky!
Think you of yourself;
The earth is a tiny
Guava fruit; you. like all
Others are a tiny ant
In it? is that not so?
Why talk madly of
The high and the low?
Pavendar Bharatidasan
(translated by P. Parameswaran)

**மொழி பெயர்க்க:**

1. Strengthen the body. : **உடலினை உறுதி செய்**
2. Love your food : **ஊண் மிக விரும்பு**
3. Thinking is great : **எண்ணுவது உயர்வு**
4. Walk like a bull. : **ஏறு போல் நட**
5. Union is strength : **ஒற்றுமை வலிமையாம்**
6. Practice what you have learnt : **கற்றது ஒழுகு**

இவை அனைத்தும் “பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி”

**மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க:**

எட்டாக்கனி, உடும்புப்பிடி, கிணற்றுத்தவளை, ஆகாயத்தாமரை, எடுப்பார் கைப்பிள்ளை, மேளதாளத்துடன்.

**எ.கா: எட்டாக்கனி :**

முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

**உடும்புப்பிடி :**

என் தம்பிக்கு பிடிவாத குணமாததால் பிடித்தால் உடும்புப்பிடிதான்.

**கிணற்றுத் தவளை :**

கிணற்றுத் தவளை போல் உன் வாழ்வை ஒரு குறுகிய எல்லைக்குள் சுருக்கிக் கொள்ளாதே!
(அல்லது) கிணற்றுத் தவளை போல் எதுவும் தெரியாமல் இருக்காதே.

www.nammakalvi.com



**ஆகாயத்தாமரை :**

ஆகாயத் தாமரையைப் பறிக்க விரும்புவது போல் இல்லாத ஒன்றை விரும்பி ஏற்காதே.

**எடுப்பார் கைப்பிள்ளை :**

என் நண்பன் எடுப்பார் கைப்பிள்ளை போல் யார் எதனைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்வான்; நம்பி விடுவான்.

**மேளதாளத்துடன் :**

எம் பள்ளிக்கு வருகை தந்த அமைச்சரை மேளதாளத்துடன் வரவேற்றோம்.

**பத்தியில் இடம் பெற்றுள்ள இயல்புப் புணர்ச்சிகளையும், விகாரப் புணர்ச்சிகளையும் எடுத்து எழுதுக:**

காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்த பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வச்சிற்பங்கள் மட்டுமல்லாது பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

**இயல்புப் புணர்ச்சி சொற்கள்:**

நுழைவு வாயிலின் – நுழைவு + வாயிலின்

நிற்பது போன்று – நிற்பது + போன்று

**விகாரப்புணர்ச்சிச் சொற்கள்**

1. **தோன்றல் விகாரப் புணர்ச்சி**

சுற்று + சுவர் → சுற்றுச்சுவர்

கலை + கூடம் → கலைக்கூடம்

தெய்வம் + சிற்பங்கள் → தெய்வச்சிற்பங்கள்

குடைவரை + கோயில் → குடைவரைக்கோயில்

2. **கெடுதல் விகாரப் புணர்ச்சி**

வைகுந்தம் + பெருமாள் → வைகுந்த பெருமாள்

3. **திரிதல் விகாரப் புணர்ச்சி**

பல்லவர் காலம் + குடைவரைக் கோவில் → பல்லவர் காலக் குடைவரைக் கோவில்

**மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

1. **இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.**

இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

2. **கயல்பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.**

கயல் பானை வனையக் கற்றுக் கொண்டாள்.

3. **நேற்று தென்றல் காற்று அடித்தது.**

நேற்று தென்றல் வீசியது

www.nammakalvi.com



**4. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.**

தென்னங்கீற்றில் இருந்து நார் கிழித்தனர் (கிழித்தார்)

**5. அணில் பழம் சாப்பிட்டது**

அணில் பழம் தின்றது

**6. கொடியிலுள்ள மலரை எடுத்து வா.**

கொடியில் உள்ள மலரைக் கொய்து வா. (அல்லது) கொடியில் உள்ள பூக்களைப் பறித்து வா?

**கவிதை படைக்க.**

**மூடநம்பிக்கை, புவியைப் போற்று, அன்பினவழி**

**எ.கா:**

**மூட நம்பிக்கை**

பூனை குறுக்கே போனதற்குக்
கவலைப்படுகிறாயே!
அந்தப் பூனைக்கு என்ன ஆனதோ?

**புவியைப் போற்று**

புத்துலகமாய் மாற்று
சுற்றுச்சூழல் காத்திடு
சுகமாய் வாழ்ந்திடு
சுகமாய் வாழ்ந்திடு
உயிரனைத்தும் பேணிடு
உலகையழிக்க நாணிடு


**அன்பின் வழி**

அன்பு எனும் ஒற்றை வழியே
இவ்வுலகினை ஆள்கிறது
அன்பு வழியும் தெய்வீக வழியும் ஒன்றே
எங்கே அன்பின் வழி உளதோ
அங்கே தெய்வம் குடி கொள்ளும்!

## மொழியோடு விளையாடு

பக்கம்: 174

**விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.**




**கண்டுபிடிக்க.**

**1. எண்ணும் எழுத்தும் கண் - இத்தொடரை ஒருவர் 1, 2, 3, 4, 1, 5, 6, 7, 4, 8, 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றி கீழ்க்காணும் சொற்களை எப்படிக் குறிப்பிடுவார்.**

www.nammakalvi.com



**விடைகள்:**

அ) எழுது → 1, 5, 7 ஆ) கண்ணும் → 8, 2, 3, 4 இ) கழுத்து → 8, 5, 6, 7 ஈ) கத்து → 8, 6, 7

**2. என் வகுப்பில் படிக்கும் அனைவரும் புதிய புத்தகம் வைத்திருந்தனர். இராமனும் புதிய புத்தகம் வைத்திருந்தான். எனவே, இராமன் என் வகுப்பு மாணவன் - இக் கூற்று.**

அ) உண்மை ஆ) பொய் இ) உறுதியாகக் கூறமுடியாது

**விடை: இ) உறுதியாகக் கூறமுடியாது**

**காரணம் :** அனைவரும் என்று கூறிய பின் இராமன் வேறு வகுப்பு மாணவனாகக் கூட இருக்கலாம்.

## அகராதியில் காண்க.

**ஏங்கல், கிடுகு, தாமம், பான்மை, பொறி**

அ) ஏங்கல் - ஓசை, மயிற்குரல், அழுதல், குழந்தைகளுக்கு வரும் ஒருவகை நோய்

ஆ) கிடுகு - கேடகம், முடைந்த ஓலைக் கீற்று, சட்டப்பலகை

இ) தாமம் - பூமாலை, வடம், புகழ், ஒளி, பரமபதம்

ஈ) பான்மை - குணம், தகுதி, முறைமை, சிறப்பு

உ) பொறி - புள்ளி, தழும்பு, எந்திரம், ஒளி, ஐம்பொறி

## உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக.

1. மலர்விழி வீணை வாசித்தாள்: கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
   **மலர்விழி வீணை வாசித்தாள். கேட்டவர் இன்ப வெள்ளத்தில் நீந்தினர்.**
2. குழலியின் இசையைச் சுவைத்தவர், கடல் போன்ற கவலையிலிருந்து நீங்கினர்.
   **குழலியின் இசையைச் சுவைத்தவர் கவலைக்கடலில் இருந்து நீங்கினர்.**
3. தேன் போன்ற மொழியைப் பவள வாய் திறந்து படித்தாள்
   **பவளவாய் திறந்து மொழித்தேனைப் படித்தாள்.**
4. முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.
   **முத்துநகை தன் புருவவில்லில் மை தீட்டினாள்.**

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



என்னை நானே
செதுக்கும் சிற்பியாவேன் - ஆம்
கல்வி எனும் உளி கொண்டு
உயரிய சிந்தனை செயல் எனும்
நுட்பங்களுடன் என்னை நானே
வடித்து கொள்கிறேன் சிற்பமாக .........

www.nammakalvi.com



## செயல்திட்டம்

உங்கள் மாவட்டத்தின் கலைநயம் மிக்க இடங்களின் சிறப்புகளைப் படங்களுடன் திரட்டிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.

அந்தந்த மாவட்டத்தின் சிறப்புகளைக் குறிக்கும் தொகுப்பேட்டை, மாணவர்களே உருவாக்குங்கள்.

## நிற்க அதற்குத்தக...

**என்னை மகிழச் செய்த பணிகள்**

**(எ.கா)**

1. இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன்.
2. எனது வகுப்பறையில் கரும்பலகையின் கீழ் சிதறிக் கிடந்த சுண்ணக் கட்டித்துண்டுகளைத் திரட்டி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் கைதட்டல் பெற்றேன்.
3. **வயதான என் பாட்டியின் விருப்பத்தை நிறைவேற்ற அவர்களைப் பாதுகாப்பாகக் கோவிலுக்கு அழைத்துச் சென்றேன். அம்மா பாராட்டினாள் – மகிழ்ந்தேன்.**
4. **செஞ்சிலுவைச் சங்கத்தில் இணைந்து மாணவப் பருவத்திலே சேவை செய்து அனைவரது பாராட்டையும் பெற்றேன்; மகிழ்ச்சியடைந்தேன்.**

## கலைச்சொல் அறிவோம்

**குடைவரைக்கோயில் -** (Cave temple)

பெரிய மலை (வரை) களைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயில்களைக் குறிப்பது

**கருவூலம் -** (Treasury)

அரசின் செல்வம் மற்றும் நிதி சார்ந்த அனைத்தும் பாதுகாக்கப்படும் இடம்.

**மதிப்புறு முனைவர் -** (Honorary Doctorate)

தொழில்துறை, கலை, அரசியல், இலக்கியம் ஆகிய துறைகளில் சிறப்பாக பங்காற்றி வாழ்நாள் சாதனை புரிபவர்களுக்கு வழங்கப்படும் கௌரவ பட்டம்.

**மெல்லிசை -** (melody)

இனிமையான இசையை மென்மையாக வெளிப்படுத்துதல்

**ஆவணக் குறும்படம் -** (Document short film)

ஒரு சமூகப் பிரச்சனை, அதன் தீவிரம் அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை குறைந்த நேரத்தில் மக்கள் மனதில் பதியும் வண்ணம் எடுத்துச் சொல்லும் படம்.

**புணர்ச்சி -** (combination)

தமிழ் இலக்கணத்தில் இடம் பெறுவது. ஒரு சொல்லைப் பிரித்து நிலைமொழியும் வருமொழியும் எவ்வாறு இணைகின்றன என்பதைக் கூறும் இலக்கணம்.

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*வாழ்வியல்*

# இயல் ஆறு — திருக்குறள்

## புல்லறிவாண்மை

**அதிகார விளக்கம் :** அறிவு இல்லாமையும், தானாகச் செயலைச் செய்யும் தெளிவு இல்லாமையும் உடையாரின் இழிவு கூறப்படுகிறது.

**1. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஒம் அளவுமோர் நோய்**

**விளக்கம் :** தனக்கான செயலை (நன்மையை) பிறர் எடுத்துச் சொன்னாலும் செய்யாதவனாய் தானாகவும் சிந்தித்துச் செய்யாதவனாய் உள்ளவன், வாழும் காலம் முதல் உயிர் போகும் காலம் வரை தீராத நோயாளி ஆவான்.

**2. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டானாம் தான்கண்ட வாறு.**

**விளக்கம் :** அறிவில்லாதவனுக்குத்தனது அறிவைக்காட்ட நினைப்பவன்,தானே அறிவில்லாதவனாய் நிற்பான். அறிவு இல்லாதவனோ தான் அறிந்த வரையில் தன்னை அறிவுள்ளவனாக எண்ணித் தோன்றுவான். (கொள்வான்)

**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| **ஏவலும்** | - எடுத்துச் சொல்லுதல் | **செய்கலான்** | - செய்யாதவன் |
| **தான் தேறான்** | - தானாகத் தெளிந்து செய்யாதவன் | **காணாதான்** | - அறிவில்லாதவன் |

## இகல்

**அதிகார விளக்கம் :** மற்றவர்களோடு கூடி வாழா தீய பண்பே இகல் எனப்படும்.

**3. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்**
**துன்பத்துள் துன்பங் கெடின்**

**விளக்கம் :** துன்பங்களில் மிகக் கொடிதான மனக்கசப்பு என்னும் பகையாகிய துன்பம் அழிந்து விட்டால், இன்பங்களில் பெரிய இன்பம் உண்டாகும்.

**சொல்லும் பொருளும்**

**இகல்** - மனக்கசப்பால் வரும் பகை

## குடிமை

**அதிகார விளக்கம் :** உயர்குடிப்பிறப்பின் சிறப்பை உணர்த்தும் அதிகாரம்

**4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்.**

www.nammakalvi.com



**விளக்கம் :** கோடி கோடியாய்ப் பொருளை அடுக்கிக் கொடுத்தாலும், அத்தகுப் பொருளைப் பெறுவதாக இருந்தாலும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒழுக்கக் குறைவான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

**சொல்லும் பொருளும்:**

**கோடி** - கோடிக்கணக்கான பொருள்

**குடிப்பிறந்தார்** - உயர்குடிப்பிறந்தவர்

**குன்றுவ செய்தல் இலர்** - ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்யமாட்டார்.

## சான்றாண்மை

**அதிகார விளக்கம் :** உயர்குணம் பொருந்திய சான்றோர்களின் பண்புகளையும் சிறப்புகளையும் கூறும் அதிகாரம்

5. **அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

**விளக்கம் :** அன்பு, பழிக்கு நாணுதல், வெட்கப்படல், கொடுத்து உதவும் பண்பு இரக்கம், உண்மை, ஆகிய ஐந்தும் சான்றாண்மை என்னும் விதானத்தை (கூரையை) தாங்கும் தூண்களாகும்.

6. **ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

**விளக்கம் :** செயல் செய்யும் ஆற்றல் உடையவரின் பெரிய ஆற்றலே, பணிவுடன் நடத்தல் ஆகும். அதுவே, பகைவர்களையும் நண்பர்களாக்கும் சான்றோர் தம் ஆயுதமாகும்.

7. **ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)**
**ஆழி எனப்படு வார்,**

**விளக்கம் :** சான்றாண்மைக்குக் கடல் என்று, மதிக்கப்படுகின்றவர்கள் சான்றோர். உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும், தம் நிலையில் இருந்து வேறுபடாமல் இருப்பர்.

**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| **நாண்** | - பழிக்கு நாணுதல் | **ஒப்புரவு** | - அனைவரிடமும் இணக்கம் |
| **மாற்றாரை** | - பகைவரை | **பெயரார்** | - தன் நிலையில் மாறாதவர் |
| **ஆழி** | - கடல் | | |

## நாணுடைமை

**அதிகார விளக்கம் :** தகாத செயல்களைச் செய்வதற்கு வெட்கப்படுதல்

8. **பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து.**

**விளக்கம் :** பிறர் நாணத்தகுந்த பழிச் செயல்களுக்கு அஞ்சாமல், நாணம் இன்றி ஒருவன் இருப்பானாகில், அறக்கடவுள் நாணி அவனைக் கைவிட்டு விடும்.

**சொல்லும் பொருளும்:**

**நாணம்** - அஞ்சுதல், வெட்கப்படுதல்.

www.nammakalvi.com



## உழவு

**அதிகார விளக்கம் :** உழவுத் தொழிலின் மேன்மையையும், சிறப்பையும் கூறுவது

**9. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

**விளக்கம் :** உலகம் பல தொழில்களைச் செய்து இயங்கினாலும் (சுழன்று வந்தாலும்), உலகமானது ஏர்த்தொழிலாகிய உழவுத்தொழிலை நம்பியே அதன் பின் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்பத்திற்கு உள்ளானாலும் உழவுத்தொழிலே முதன்மையான சிறந்த தொழிலாகும்.

**10. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.**

**விளக்கம் :** பிற தொழில்கள் செய்யும் அனைவரையும் உழுபவரே தாங்கி நிற்பவர் ஆவார். எனவே உழவர்களே உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ஆவார்.


**சொல்லும் பொருளும்:**

| | | | |
|---|---|---|---|
| **சுழன்று** | - இயங்கி | **உழந்தும்** | - துன்பத்திற்கு உள்ளாகுதல் |
| **தலை** | - முதன்மையான | **எழுவாரை** | - பிற தொழில் செய்து வாழ்வோரை |
| **பொறுத்து** | - தாங்கும் | **ஆணி** | - அச்சாணி |

## கற்பவை கற்றபின்

பக்கம்: 179

**1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க.**



அ) இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ) ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்.

இ) சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

**விடை: இ) சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.**

**2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்து பொருத்துக. (விடையுடன்)**

| | |
|---|---|
| கண்டானாம் தான் கண்டவாறு | தெரிந்த அளவில் அறிவுடையவனாய்த் தோன்றுவான் |
| அறம் நாணத்தக்கது உடைத்து | அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப் போகும் |
| மாற்றாரை மாற்றும் படை | பகைவரையும் நட்பாக்கும் கருவி |

**3. ஐந்து சால்புகளில் இரண்டு**

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

**விடை : ஆ) நாணமும் இணக்கமும்**

www.nammakalvi.com



**4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| ஒ | ப் | பு | று |
| க | ப | ர | வ |
| ட | டை | வு | த |
| ல் | உ | ழ | வ |
| ம் | ற | அ | ர் |

அ) அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் - **ஒப்புரவு**

ஆ) உலகத்துக்கு அச்சாணி போன்றவர்- **உழவர்**

இ) தான் நாணான் ஆயின் ------------ நாணத்தக்கது - **அறம்**

ஈ) ஆழி என்பதன் பொருள் ------------ **கடல்**

உ) மாற்றாரை மாற்றும் ------------ - **படை**

ஊ) ஒழுக்கமான குடியில் பிறந்தவர் ------------ செய்வதில்லை - **தவறு**

**5. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்**
**இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்கக் கதை எழுதுக.**

நான் வசிக்கும் ஊருக்கு அருகில் ஒரு சிறிய கிராமம் (சிற்றூர்) உள்ளது. 100 குடும்பங்களே உடைய அச்சிற்றூரில் உழவே பிரதானமான தொழில். அங்குள்ள மக்களுக்கு கல்வியறிவு கிடையாது. அவ்வூருக்கு நன்கு படித்த பணி புரிந்து ஓய்வு பெற்ற ஒருவர் குடி வந்தார். அவர் பெயர் சாமிநாதன்.

அண்டை ஊரில் இருந்து ஒரு செல்வந்தன் இச்சிற்றூர் மக்களின் விளைபொருட்களை அநியாயமாக அடித்துப் பிடித்து அரைகுறை விலையில் வாங்கிக் கொண்டிருந்தான்.

சாமிநாதன் அந்த ஊருக்கு வந்தவுடன் இதனைத் தெரிந்து கொண்டார். மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மக்கள் நியாயவிலையாய் இருந்தால் வாங்கிக்கொள் இல்லையென்றால் சென்று விடு என்று மக்கள் குரல் கொடுக்கத் தொடங்கினர். செல்வந்தன் காரணம் அறிந்து கொண்டு சாமிநாதனைச் சந்தித்து வழக்கமாக நான் செய்வதைத் தடையின்றி செய்ய உதவினால், உமக்குச் சரிபாதி பணத்தையும், உனக்குத் தேவையான தானியவகைகள் அனைத்தையும் விலையில்லாமல் உமக்கும் தருகிறேன் என்றார்.

ஆனால் சாமிநாதனோ ......... நீ கோடி கோடியாய்க் கொடுத்தாலும், நீதி தவறி நடக்க மாட்டேன், இந்த அப்பாவி மக்களின் வயிற்றில் உன்னை அடிக்கவிட மாட்டேன் என்று ஓடிப்போ ........ என்று விரட்டி விட்டார்......... தன் நிலையில் இருந்து மாறவில்லை அவர்.

ஆம்.

“அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்

குன்றுவ செய்தல் இலர்” அன்றோ.

## பாடநூல் வினாக்கள்

### சிறுவினா

**1. இறக்கும் வரை உள்ள நோய் எது?**

தன் செயலைப் பிறர் எடுத்துச் சொல்லியும் செய்யாதவனாய், தானும் சிந்தித்து செயல்படத் தெரியாதவனாய் உள்ளவனின் வாழ்வு, உயிர் போகும் வரை உள்ள நோய் ஆகும்.

www.nammakalvi.com



"ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்''.

**2. அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண் -**
**இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கி எழுதுக.**

இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி ஏகதேச உருவக அணி ஆகும்.

**அணி விளக்கம் :** ஒரு செய்யுளில் தொடர்புடைய இரு பொருட்களுள், ஒன்றை மட்டும் உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டு விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

**பொருத்தம் :** மேற்கூறிய இக்குறட்பாவில் சான்றோர் வாழ்விற்குத் தேவையான ஐந்து நற்குணங்களை தூண் என உருவகித்து விட்டு, சான்றாண்மையை (விதானம் - கூரை) என உருவகிக்காமல் விட்டு விட்டதால் ஏகதேச அணிக்குப் பொருந்தி வருகிறது.

**3. உலகிற்கு அச்சாணி எனப்படுபவர் யார்? ஏன்?**
உலகிற்கு அச்சாணியாக விளங்குபவர் உழுபவரே ஆவார். மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால் அவ்வாறு அழைக்கப்படுகிறார்.

**4. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டானாம் தான் கண்டவாறு**
இக்குறட்பாவில் பயின்று வரும் தொடைநயத்தை எழுதுக.

| | |
|---|---|
| காணாதான் | காணான் |
| கண்டானாம் | கண்டவாறு |

இதில் உள்ள நயம்: சீர் மோனை, சீர் எதுகை

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெறிக

**1. அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்யாதவர்**
அ) குடிஇழிந்தார் ஆ) குடி இறந்தார்
இ) குடிப்பிறந்தார் ஈ) குடிமகிழந்தார் **விடை : இ) குடிப்பிறந்தார்**

**2. ஊழி பெயரினும் தான் பெயராதவர்**
அ) பொய்மையுடையவர் ஆ) இழித்தன்மையுடையவர்
இ) சான்றாண்மையுடையவர் ஈ) கொடுங்கோலர்
**விடை : இ) சான்றாண்மையுடையவர்**

**3. ''சாகும் வரை உள்ள நோய்'' - என்று வள்ளுவர் யாரைக் கூறுகிறார்?**
அ) அறிவுடையாரை ஆ) புல்லறிவுடையாரை
இ) அன்புடையாரை ஈ) பண்புடையாரை **விடை : ஆ) புல்லறிவுடையாரை**

www.nammakalvi.com



**4. காணாதான் காட்டுவான் - காணாதான் யார்?**

அ) அறிவுடையான் ஆ) அறிவில்லாதவன்
இ) அன்புடையான் ஈ) பண்புடையான் **விடை : ஆ) அறிவில்லாதவன்**

## குறுவினா

**1. அறம் யாரை விட்டு விலகிப்போகும்?**

பிறர் வெட்கப்படும் பழிக்குக் காரணமாய் இருந்தும் தான் வெட்கப்படவில்லை என்றால், அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப் போகும்.

**2. சிறந்த இன்பம் எப்போது பெறலாம்?**

துன்பங்களில் மிகக் கொடிதான மனக்கசப்பு என்னும் பகையாகிய துன்பம் அழிந்து விட்டால் இன்பங்களில் சிறந்த இன்பத்தைப் பெறலாம்.

"இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்"

**3. உழவே தலை - ஏன்?**

உலகம் பல தொழில்களால் இயங்குகிறது. எனினும் உலகமானது ஏர்த்தொழிலாகிய உழவுத்தொழிலுக்குப் பின்னாலேயே போகும். அதனால் வருந்தி உழைத்தாலும் உழவே சிறந்தது.

## சிறுவினா

**1. சான்றாண்மை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?**

- பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும் அனைவரிடமும் இணக்கமும் இரக்கமும் உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்! அணி - ஏகதேச உருவக அணி
- செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல். அதுவே சான்றோர்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவி.
- ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக் கரை போன்றவர் நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார்!

**2. உழவுத் தொழிலை வள்ளுவர் எவ்வாறு போற்றுகிறார்?**

- உலகம் பல தொழில்களைச் செய்து இயங்கினாலும் (சுழன்று வந்தாலும்), உலகமானது ஏர்த்தொழிலாகிய உழவுத்தொழிலை நம்பியே அதன் பின் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்பத்திற்கு உள்ளானாலும் உழவுத்தொழிலே முதன்மையான சிறந்த தொழிலாகும்.
- பிற தொழில்கள் செய்யும் அனைவரையும் உழுபவரே தாங்கி நிற்பவர் ஆவார். எனவே உழவர்களே உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ஆவார்.

**3. சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் யாவை?**

- அன்பு
- பழிக்கு அஞ்சுதல் (நாண்)
- ஒப்புரவு (இணக்கம்)
- கண்ணோட்டம்
- வாய்மை - இவையே சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் ஆகும்.

※※⁂⁂⁂※※